உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௩௯.]	சித்திரபானு-௵ ஐப்பசி ௴	[பகுதி—௧௨.
Vol. 39.	**October–November 1942.**	**No. 12.**

உள்ளுறை.

சங்கீத பாரிஜாதம்:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்	௫௨௫—௫௩௬
ஆயுள்நீட்சி ஆராய்ச்சி:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B V.C.	௫௩௭—௫௪௦
விஞ்ஞான முன்னேற்றம்:—	ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்க்ள் B.A., B.L.	௫௪௧-௫௪௬
அகநானூறு:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L.	௫௪௭—௫௫௨
சேதுவேந்தர் பிறந்ததின வைபவம்:—	ஸ்ரீ. J. நாராயணசுந்தரமையங்காரவர்கள்	௫௫௩—௫௫௬
சேதுபதிமஹாராஜாவர்களது 34-வது வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவிகள்:—	புலவர்கள்	௫௫௭—௫௭௧
மதிப்புரை,—		௫௭௨—௫௭௪
செந்தமிழ் ௩௯-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியவை:—		௧—௬

பத்திரர்சிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1942.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—௩௯.] சித்திரபானு-௵ ஐப்பசி ௴ [பகுதி—௧௨.

Vol. 39. October–November 1942. No. 12.

சங்கீத பாரிஜாதம்

சுவாமி விபுலாநந்தரவர்கள்.

அஹோபலபண்டிதர் என்னும் பெரியார் வடமொழியில் வகுத்த சங்கீத பாரிஜாதம் என்னும் இசைநூலானது காளிவரவேதாந்த வாகீசர், சாரதாபிரசாதகோஷர் எனப் பெயரிய அறிஞரிருவரால் 1879-ஆம் ஆண்டிலே கல்கத்தாநகரத்து நூதன ஸம்ஸ்க்ருத யந்திரசாலையிலே அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சிட்டு அறுபது ஆண்டுகளுக்குமேலாகிவிட்டமையினாலே இந்நூற்பிரதிகள் கிடைப்பது அரிதாயிற்று. நூலாசிரியரதுகாலம் வரலாறு முதலியன அறிதற்கில்லையெனப் பதிப்பாசிரியர் கூறுகின்றனர். தனித்த ஓர் ஏட்டுப்பிரதியினின்றும் பதிப்பிக்கப்பட்டமையின் இடையிடையே சிலபாகங்கள் விடப்பட்டிருக்கின்றன. இந்நூலின் நேர்மொழி பெயர்ப்பு, பாரசீக (இரானிய) மொழியிலே ஆக்கப்பட்டதென்றும் அம்மொழிபெயர்ப்புப் பிரதியொன்று ஸர் உவில்லியம் ஜோன்ஸ் என்னும் பேரறிஞரால் லண்டன்மாநகர்க்கு அனுப்பப்பட்டதென்றும் அம்மொழிபெயர்ப்புப்பிரதியின்பிரதி கிடைத்தாலன்றி விடுபட்ட பாகங்களை நிறைவித்தற்கு வழியில்லையென்றும் பதிப்பாசிரியர் முகவுரையிற் குறிப்பிடுகின்றனர்.

இந்நூலிற் கூறப்பட்டிருக்கின்ற இசைமரபு சங்கீதரத்தினாகர மரபினின்று வேறுபட்டது. வீணைக்கு மெட்டுவைத்தற்கு இந்நூலாசிரியர் தருகின்ற கணக்கினைத் தனியாகப் பின்பு ஆராய்வாம். இடைக்காலத்திலிருந்த இவ்வாசிரியர் நரம்புக்கருவிகளை வாசிப்போர்க்குப் பெரிதும் பயனளிக்கின்ற அலங்காரங்களை விரித்துக் கூறுகின்றார். அவற்றை உளங்கொளப்புகுமுன் அழகுக்கலையனைத்தினுக்கும் பொதுவாகிய சில இலக்கணங்களை ஆராய்ந்தறிவாம்.

அகரமுதல் னகரவிறுவாகிய முப்பதும், சார்ந்துவரன்மரபின வாகிய மூன்றும் என்னும் முப்பத்துமூன்று எழுத்துக்களைத் தொழிற்படுத்துதலினாலே இயற்றமிழானது, பொருள்பொதிந்த சொற்களை ஆக்கி அவை கருவியாகப் பாரகாவியங்களையும் நீதிநூல்களையும் வகுத்து இம்மைமறுமைப் பயனளிக்கின்றது.

சரிகமபதநி என்னும் ஏழு ஓசை கருவியாக இசைத்தமிழானது ஏழ்பெரும்பாலைகளைவகுத்து அவை நிலைக்களமாக நூற்றுமூன்று பண்களைப் பிறப்பித்து அவைதமதுவிரிவாகப் பதினோராயிரத்துத் தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்று என்னுந் தொகையினவாகிய ஆதியிசைகளையமைத்து இம்மையின்பமும் தேவர்ப்பராவுதலானெய்தும் மறுமையின்பமும் பெறுமாறுசெய்கின்றது.

நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்னும் மெய்ப்பாடுகளை நிலைக்களமாகக்கொண்டு உள்ளத்துணர்வினாலும், உடலுறுப்பினாலும், மொழித்திறத்தினாலும், நடையுடையினாலும் (இவற்றை முறையே சாத்விக, அங்கிக, வாசிக, ஆகர்ய அவிநயங்களென வடமொழிப்பரதங்கூறும்) அவை தம்மைத் தொழிற்படுத்தி இருவகைக்கூத்து, பத்துவகைநாடகம் என்னுமிவற்றைத் தோற்றுவித்து நாடகத்தமிழ் உள்ளத்திற்கு உவகையளிக்கின்றது.

குரு, லகு, எனநின்ற இருவகையசைகள்நிலைக்களமாகத் தோன்றிய விருத்தவிகற்பங்கள் ஆயிரக்கணக்காகப் பெருகிநின்றன. நேர்கோடு வட்டம் முக்கோணம் ஆகிய மூன்று மூலவடிவங்

களினின்றுதோன்றிய உருக்கள் எண்ணிறந்தன. எல்லாவகையான வர்ணங்களும் அமைந்த அழகிய படங்களை அச்சியற்றுவோர் பயன்படுத்தும்நிறங்கள் நீலம், மஞ்சள், சிவப்பு என்னும் மூன்றுமேயாம்.

இவ்வாறு ஆராயுமிடத்துக் கண்ணினுலும், செவியினுலும், உள்ளத்தினுலும் உணர்ந்து இன்புறற்பாலவாய அழகுக்கலையுருக்களெல்லாம் ஒருசில மூலவுருக்கள் காரணமாகத்தோன்றிநின்றனவென்பது தெளிவாகின்றது.

உருக்களை ஆக்கிக்கொள்ளும் முறையினைக்கூறும்நூல்கள் பொதுவியல்புகளை வகுத்துக்காட்டுவன. புலவன், இசையோன், கூத்தன், ஓவியனென்று இன்னோர் தமது சொந்த ஆற்றலினுலே நுண்ணிய விகற்பங்களைத் தோற்றுவித்துச் செம்மைநலஞ்சான்ற உருக்களைப் பெருக்குதலினுலே அழகுக்கலைகள் விருத்தியடைகின்றன.

பிற்காலத்தாரால் துறை தாழிசை விருத்தம் என வகுக்கப்பட்ட பாவினங்கள் பெரிதும் இசைத்தமிழ்ப்பாலவாதலின் இயற்றமிழ் கூறப்புகுந்த ஆசிரியர் தொல்காப்பியனுர் அவையனைத்தினையும் அவைதம்முள் அடங்காத சிலவற்றையும் ஒருபிழம்பாகக் கொச்சகவொருபோகெனக்கூறியமைந்தார். குறித்த மூன்றினுளொன்ருகிய விருத்தமானது கம்பர், சேக்கிழார், வில்லிபுத்தூரார் என்னும் உத்தமக்கவிகளது கையிலே எத்தனையோபலவாகிய அழகிய உருவங்களைப்பெற்றுத் தனிச்சிறப்புடையதாகவிளங்குகின்றது. விருத்தத்தின் ஒருபிரிவாகிய வண்ணவிருத்தம். அருணகிரிநாதரது இசையொடுமருவிய அருட்புலமைகாரணமாக ஆயிரக்கணக்கான அழகிய உருவங்களைப் பெற்றுநிற்கிறது.

இவ்வாறு நோக்குமிடத்துப் புத்தம்புதிய உருவங்களைப்படைத்துத்தருதலே கவிஞர் முதலிய அழகுக்கலையோரியற்றுதற்குரிய அருந்தொழில் என்பது புலனுகின்றது. மரபுபட்டுவந்த உருவங்களிற் பயின்ருேர் நுண்ணுணர்வுடையராயின் புதிய உருவங்களை எளிதின் அமைப்பர். முன்னிருந்து இறந்துபட்ட உருவங்களை ஆராய்ந்துகண்டறிதற்கும் அத்தகைய பயிற்சியும் நுண்ணுணர்வும் வேண்டப்படுபவேயாம்.

அஹோபலர் வகுத்துக்காட்டிய இசையுருவங்களை எழுதப் புகுவாம். எழுதுமிடத்து ஜ ஷ ஸ ஹ க்ஷ எனத் தமிழ்வழக்கிற் கலந்துள்ள வடவெழுத்துக்களை உருத்திரியாது கைக்கொண்டும் ஏனைய எழுத்துக்களை வடமொழியாக்கவிதிகட்கியையத் திரித்தும் எழுதுவாம். ஓரிடத்தில் ஶ்யேந: என்பதை ஒலியொற்றுமை பற்றி ஸ்யேநம் எனக்கொண்டாம்.

1. பத்திரம்

ஸ ரி ஸ   ரி க ரி   க ம க   ம ப ம

ப த ப   த நி த   நி ஸ நி   ஸ நி ஸ

2. நந்தம்

ஸஸ ரிரி ஸஸ   ரிரி கக ரிரி

கக மம கக   மம பப மம

பப தத பப   தத நிநி தத

நிநி ஸஸ நிநி   ஸஸ நிநி ஸஸ

3. ஜீதம்

ஸ க ரி ஸ   ரி ம க ரி   க ப ம க

ம த ப ம   ப நி த ப   த ஸ நி த

4. ஸோமம்

ஸஸ கக ரிரி ஸஸ   ரிரி மம கக ரிரி

கக பப மம கக   மம தத பப மம

பப நிநி தத பப   தத ஸஸ நிநி தத

5. கிரீவம்

ஸ க ரி க ம க ரி ஸ   ரி ம க ம ப ம க ரி

க ப ம ப த ப ம க   ம த ப த நி த ப ம

ப நி த நி ஸ நி த ப

6. பாலம்

ஸ க ரி ம ம க ரி ஸ   ரி ம க ப ப ம க ரி

க ப ம த த ப ம க   ம த ப நி நி த ப ம

ப நி த ஸ ஸ நி த ப

7. பிரகாசம்

ஸஸ ரிரி கக மகரி கரிஸ
ரிரி கக மம பமக மகரி
மம பப தத நிதப தபம
பப தத நிநி ஸநித நிதப

8. விஸ்தீர்ணம்

ஸா ரீ கா மா பா தா நீ ஸா

9. நிஷ்கர்ஷம்

ஸஸ ரிரி கக மம பப தத நிநி ஸஸ

10. காத்திரவர்ணம்

ஸ ஸ ஸ ரி ரி ரி க க க ம ம ம
ப ப ப த த த நி நி நி ஸ ஸ ஸ
ஸ ஸ ஸ ஸ ரி ரி ரி ரி க க க க ம ம ம ம
ப ப ப ப த த த த நி நி நி நி ஸ ஸ ஸ ஸ

11. விந்து

ஸா ஸா ஸா ரி ரீ ரீ ரீ க கா கா கா ம மா மா மா ப
பா பா பா த தா தா தா நி நீ நீ நீ ஸ

12. ஹஸிதம்

ஸ ஸ ரி ஸ ரி க ஸ ரி க ம ஸ ரி க ம ப
ஸ ரி க ம ப த ஸ ரி க ம ப த நி ஸ ரி க ம ப த நி ஸ

அல்லது

ஸ ரி ரி க க க ம ம ம ம ப ப ப ப ப
த த த த த த நி நி நி நி நி நி நி ஸ ஸ ஸ ஸ ஸ ஸ ஸ ஸ

13. பிரேங்கிதம்

ஸாரீ ரீகா காமா மாபா பாதா தாநீ நீஸா

14. ஆக்ஷிப்தம்

ஸஸகக ரிரிமம கககபப மமதத பபநிநி ததஸஸ

15. ஸந்திப்ரச்சாதநம்

ஸரிகா ரிகமா கமபா மபதா பதநீ தநிஸா

16. உத்கீதம்

ஸஸரிகா ரிரிகமா ககமபா மமபதா
பபதநீ ததநிஸா

17. உத்வாஹிதம்

ஸ ஸ ஸ ஸ ரி ரி க ம ரி ரி ரி ரி க க ம ப
க க க க ம ம ப த ம ம ம ம ப ப த நி
ப ப ப ப த த நி ஸ

18. திரிவர்ணம்

ஸ ரி க க க ரி க ம ம ம க ம ப ப ப
ம ப த த த ப த நி நி நி த நி ஸ ஸ ஸ

19. பிருதக்வேணி

ஸஸஸ ரிரிரி ககக ரிரிரி ககக மமம
ககக மமம பபப மமம பபப ததத
பபப ததத நிநிநி ததத நிநிநி ஸஸஸ

[8 முதல் 19 வரையுமுள்ள பன்னிரண்டினையும் அவரோஹணத்திலுங் கொள்க. அவரோஹணக்கிரமங்களைக் கற்போர் முறைப்படி எழுதிக்கொள்ளலாம். இவை 20 முதல் 31 வரையுமுள்ள எண்களைப் பெறுவ.]

32. மந்திராதி

ஸ ரி க ம ம க ரி ஸ ஸ ரி க ரி ஸ ரி க ம
ரி க ம ப ப ம க ரி ரி க ம க ரி க ம ப
க ம ப த த ப ம க க ம ப ம க ம ப த
ம ப த நி நி த ப ம ம ப த ப ம ப த நி
ப த நி ஸ ஸ நி த ப ப த நி த ப த நி ஸ

33. மந்திரமத்யம்

ஸ க ரி க	ம க ரி க	ரி க ரி ஸ	ஸ ரி க ம
ரி ம க ம	ப ம க ம	க ம க ரி	ரி க ம ப
க ப ம ப	த ப ம ப	ம ப ம க	க ம ப த
ம த ப த	நி த ப த	ப த ப ம	ம ப த நி
ப நி த நி	ஸ நி த நி	த நி த ப	ப த நி ஸ

34. மந்திராந்தம்

ஸஸ	ரிரி	கக	மக	ரிக	ரிஸ
ரிரி	கக	மம	பம	கம	கரி
கக	மம	பப	தப	மப	மக
மம	பப	தத	நித	பத	பம
பப	தத	நிநி	ஸ்நி	தநி	தப

35. பிரஸ்தாரம்

ஸம ரிப கத மநி பஸ

36. பிரஸாதம்

ஸ்ரி	ஸ்ரி	ஸ்ரி	கரி	ரிக	ரிக	ரிக	மக
கம	கம	கம	பம	மப	மப	மப	தப
பத	பத	பத	நித	தநி	தநி	தநி	ஸ்நி

37. வியாவிருத்தம்

ஸகரிம ஸரிகம ரிமகப ரிகமப
கபமத கமபத மதபநி மபதநி
பநிதஸ பதநிஸ

38. சலிதம்

ஸகரிக	மரிகஸ	ஸரிகம
ரிமகப	பகமரி	ரிகமப
கபமத	தமபக	கமபத
மதபநி	நிபதம	மபதநி
பநிதஸ	ஸதநிப	ஸநிதப

39. பரிவர்த்தம்

ஸகமரி ரிமபக கபதம
மதநிப பநிஸத தஸரிநி

(நூற்பதிப்பிலே ஈற்றுச்சீர் 'தஸரிஸ' எனத் தரப்பட்டிருக்கிறது)

40. ஆக்ஷேபம்

ஸரிக ரிகம கமப பமத மதநி தநிஸ

41. விந்து

ஸா ஸா ஸாரிஸா கா ரீ ரீ ரீகரீ மா
கா கா காமகா பா மா மா மாபமா தா
பா பா பாதபா நீ தா தா தாநிதா ஸா

42. உத்வாஹித:

ஸரிகரி ரிகமக கமபம
மபதப பதநித தநிஸநி

(மேலே 11. விந்து, 17. உத்வாஹிதமெனப் பெயரெய்தி நின்றனவாதலின், இங்குக்கூறிய இரண்டும் அவற்றின் விகற்பமெனக் கொள்ளவேண்டியிருக்கிறது.)

43. ஊர்ம்மி

ஸ மமம ஸம ரி பபப ரிப க ததத கத
ம நிநிநி மநி ப ஸஸஸ பஸ

44. ஸமம்

ஸரிகம மகரிஸ ஸரிகம
ரிகமப பமகரி ரிகமப
கமபத தபமக கமபத
மபதநி நிதபம மபதநி
பதநிஸ ஸநிதப பதநிஸ

45. பிரேங்கம்

ஸஸமம ரிரிபப ககதத மமநிநி பபஸஸ

46. நிஷ்கூஜிதம்

ஸம ஸம ஸரிகம ரிப ரிப ரிகமப
கத கத கமபத மநி மநி மபதநி
பஸபஸ பதநிஸ

47. ஸ்யேநம்

ஸரி ஸக ஸம ஸப ஸத ஸநி ஸஸ
ரிக ரிம ரிப ரித ரிநி ரிஸ
கம கப கத கநி கஸ
மப மத மநி மஸ
பத பநி பஸ
தநி தஸ
நிஸ

48. க்ரமம்

ஸ ரி ரி க க ம ரி க க மமப
க ம ம ப ப த ம ப ப ததநி
பதத நிநிஸ

49. உத்காடிதம்

ஸக ஸக ஸரிகம ரிம ரிம ரிகமப
கப கப கமபத மத மத மபதநி
பநி பநி பதநிஸ

50. ரஞ்ஜிதம்

ஸக ரிக ஸரிகம ரிம கம ரிகமப
கப மப கமபத மத பத மபதநி
பநிதநி பதநிஸ

51. ஸந்நிவ்ருத்தம்

ஸரிக ரிகம கரிஸ ரிகம
ரிகம கமப மகரி கமப
கமப மபத பமக மபத
மபத பதநி தபம பதநி
பதநி தநிஸ நிதப தநிஸ

52. பிரவிருத்தகம்

மேலே ஸங்கிவிருத்தத்திற்குத்தந்த ஸ்வரங்களை இரட்டித்து எழுதிக்கொள்க.

53. வேணு

ஸமகம ஸரிகம ரிபமப ரிகமப
கதபத கமபத மநிதநி மபதநி
பஸநிஸ பதநிஸ

54. லலிதஸ்வரம்

ஸஸ மம கக ரிஸ ஸரிகரி ஸரிகம
ரிரி பப மம கரி ரிகமக ரிகமப
கக தத பப மக கமபம கமபத
மம நிநி தத பம மபதப மபதநி
பப ஸஸ நிநி தப பதநித பதநிஸ

55. ஹூங்காரம்

ஸஸ பப ரிரி தத கக நிநி மம ஸஸ

56. ஹ்லாதமானம்

ஸமகரி ரிபமக கதபம மநிதப பஸநித

57. அவலோஹிதம்

ஸஸஸ மமம ரிரிரி பபப ககக ததத
மமம நிநிநி பபப ஸஸஸ

58. இந்திரநீலம்

ஸரி கம கரி ஸரிகரி ஸரிகம
ரிக மப மக ரிகமக ரிகமப
கம பத பம கமபம கமபத
மப தநி தப மபதப மபதநி
பத நிஸ நித பதநித பதநிஸ

59. மஹாவஜ்ரம்

ஸரி கரி ஸரி ஸரிகம ரிக மக ரிக ரிகமப
கம பம கம கமபத மப தப மப மபதநி
பத நித பத பதநிஸ

60. நிர்த்தோஷம்

ஸரி ஸரி கம   ரிக ரிக மப
கம கம பத   மப மப தநி
பத பத நிஸ

61. ஸீரம்

ஸரி ஸரிக ஸரிகம   ரிக ரிகம ரிகமப
கம கமப கமபத   மப மபத மபதநி
பத பதநி பதநிஸ

62. கோகிலம்

ஸரிக ஸரிகம   ரிகம ரிகமப
கமப கமபத   மபத மபதநி
பதநி   பதநிஸ

63. ஆவர்த்தம்

ஸரி கரி ஸரி ஸரி ஸரிகம
ரிக மக ரிக ரிக ரிகமப
கம பம கம கம கமபத
மப தப மப மப மபதநி
பத நித பத பத பதநிஸ

64. ஸதாநந்தம்

ஸரிகம ரிகமப கமபத மபதநி பதநிஸ

65. சக்ராகாரம்

ரிரிரிரி ஸரிரிரி
கககக ரிககக
மமமம கமமம
பபபப மபபப
தததத பததத
நிநிநிநி தநிநிநி
ஸஸஸஸ நிஸஸஸ

66. ஜவம்

ஸ ரி க ம ப த நி ஸ நி த ப ம க ரி ஸ

ஸ ரி க ம ப த நி த ப ம க ரி ஸ

ஸ ரி க ம ப த ப ம க ரி ஸ

ஸ ரி க ம ப ம க ரி ஸ

ஸ ரி க ம க ரி ஸ

ஸ ரி க ரி ஸ

ஸ ரி ஸ

67. சங்கம்

ஸா ஸா நித நீ நீ தப தா தா பம

பா பா மக மா மா கரி கா கா ரிஸ

68. பத்மாகாரம்

ஸ ரி ஸ ஸ ஸ ரி க க

ரி க ரி ரி ரி க ம ம

க ம க க க ம ப ப

ம ப ம ம ம ப த த

ப த ப ப ப த நி நி

த நி த த த நி ஸ ஸ

69. வாரிதம்

ஸ நிநிநி ஸ தததா ஸ பபப ஸ மமம

ஸ ககக ஸ ரிரிரி ஸ ஸஸஸ

'இவ்வாறு அறுபத்தெட்டு அலங்காரங்கள் கூறப்பட்டன' என நூலாசிரியர் உரைத்தார். 44 ஸமம், 45 பிரேங்கம் என்னும் இரண்டினையும் பதிப்பாசிரியர் ஒரே இலக்கங்கொடுத்து நிறுத்தித் தொகையினை அறுபத்தெட்டு ஆக்குகின்றார்.

இவற்றைத்தொழிற்படுத்துமுறைகள் நூலினுள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

உ

ஆயுள் நீட்சி ஆராய்ச்சி

(Longevity Research.)

ஸ்ரீ: ராவ்சாகிப். V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.

இந்தக் கட்டுரையில், 'சர்வசனரஞ்சகசாத்திரம், (Popular Science) என்னும் அமெரிக்கத் திங்கள்வெளியீட்டில் 1941-ஆம் வருடத்து அக்டோபர்மாதப் பிரசுரத்தில் 'பட்டினிகிடந்து வாழ் நாளைப் பெருக்கு' (Stay Hungry and Live Longer) என்ற தலைப்பின்கீழ் உள்ள கட்டுரைக்கருத்துக்கள் அடங்கியிருக் கின்றன.

டாக்டர். கிளைவ் எம். மக்கே. (Dr Clive M. Miccay) என்ற ஆராய்ச்சிநிபுணர் கார்நேல் பல்கலைக்கழகத்தில் (Carnell University) 'உணவும் நீடியவாழ்வும்' (Diet and Longevity) என்ற பொருள்பற்றி எட்டுவருடகாலமாக ஆராய்ச்சிசெய்துவருகிறார். அவர், அளவுகடவாத பட்டினிகிடப்பவர் அதிககாலம் வாழ்கின் றார்களென்ற உண்மையைச்சோதித்துக் கண்டுபிடித்திருக்கின்றார்.

அவர் இரண்டாயிரத்தைந்நூறு எலிகளைக்கொண்டு சோதனை நடத்திக் கண்டுபிடித்த முடிவு, வாழ்நாள் நீளுதற்கும் குறுகுதற் கும் காரணம் நாம் என்ன உணவை உண்கின்றோமென்பதைப் பொறுத்ததன்று, எவ்வளவு உணவை உண்கின்றோமென்பதைப் பொறுத்ததென்பதாம்.

மனிதனுடைய பூரணஆயுசு நூறுண்டென்றால், எலியின் முழுவாழ்நாள் உத்தேசமாக ஆயிரம் நாளென்னலாம். ஆகவே, ஆகாரவித்தியாசசம்பந்தமாக, மனிதனுக்கு எண்பதுவருடகாலத் தில் ஏற்படும் பயன், எலிகளின் திறத்தில் எண்ணூறுநாட்பய னுக்கு ஒப்பாமென்று விஞ்ஞானிகள் (Scientists) மதிப்பிட்டிருக் கிறார்கள். புட்டிகரமான போசனப்பொருள்களை இட்டபடி தின்ன விட்ட எலிகள் எழுநூறுநாட்களிற் கிழமாய் இறக்குந்தறுவாயி லிருக்கின்றனவென்றும், அந்த உணவுப்பொருள்களை அரைவயி றாவு நிரம்பத் தின்னவிட்ட எலிகள் எழுநூறுநாள்களின் முடிவில்

பலமுடையனவாயிருக்கின்றனவென்றும், சோதித்தறிந்து அறிவு நூற்புலவர் (Scientists) உண்டி சுருங்குதல் உயிர்வாழ்வு நீடித்தற்குக் காரணமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மேற்கூறிய டாக்டர் மக்கே, ஒருவர் நீண்டகாலம் வாழ்தற்கு, அவருடைய முன்னோர் பலர் நீடிய ஆயுளினராயிருத்தலுக்கு அடுத்தபடியாக, உடலுக்குவேண்டிய சத்துக்களுள்ள உணவைத் திருப்தியாகும் அளவுக்குக் குறைந்த அளவாக உண்ணுதல் உதவுவதாமென்று கூறுகின்றார். உடம்பு சிறிது மெலிவாகும்படி உணவைச்சுருக்குதல் ஆயுளைச் சிலவருடங்கள் அதிகமாக நீடிக்கச் செய்யுமென்பது அவர் சோதனைசெய்தறிந்து சொல்லுவது.

அவர் தம் ஆராய்ச்சிக்கு எலிகளைத் தெரிந்தெடுத்ததன் காரணம், மேலே கூறியபடி மனிதருக்கு ஒருவருட ஆயுள் எலிகளுக்குப் பத்துநாள் ஆயுளுக்குச் சமமாயிருப்பதோடு, உணவுகள் மனிதரைப்பாதிப்பதுபோலவே எலிகளையும் பாதிக்கின்றனவென்பதாம்.

அவர் இன்ன இன்னவகை யுணவுவகைகள் இன்ன இன்ன அளவுடையவை எலிக்குரியவையென்று தெரிந்து, அந்த உணவு வகைகளைத் தம் சோதனைக்குட்படுத்திய எலிகளுக்குக்கொடுப்பதில்,சிலவற்றுக்கு, அவ்வுணவுவகைகளை முழு அளவாகக்கொடுத்து, அதே தொகையுள்ள வேறுசில எலிகளுக்குப் பாதியளவாகக் கொடுத்தார். பாதியளவுணவுபெற்ற எலிகள் முழுஅளவு பெற்றவைகளினும் அதிககாலம் வாழ்ந்தன. பாதியுணவுபெற்ற எலிகளின் இருதயத்துடிப்பு (Heartbeating), ஒருநிமிடத்துக்கு முந்நூறாக இருக்க, முழுஉணவுபெற்ற எலிகளுக்கு நானூறாகவிருந்தது. முன்னையவை பின்னையவற்றினும் வேகங்குறைந்த உயிர்வாழ்வுடையனவாய், அதுகாரணமாக, அதிக வாழ்நாளுடையனவாயிருந்தன; ஆயினும் அதிக தீவிரமாக வேலைசெய்யும் மூளையுடையனவாகக் காணப்பட்டன. குறைந்த உணவு, சிந்தனாசத்தியை மிகுவித்துத் தேகசத்தியைக் குறைவித்தது.

அவர், நடுவயசுடைய இருநூறு எலிகளை ஐம்பதைம்பதாக நான்குபகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொருபகுதிக்கு ஒவ்வொரு வகை உணவை அதிகமாகக்கொடுத்துப் பார்த்தபோது, அதிகப் படுத்தப்பட்ட எந்தவகை உணவாலும் ஆயுள் அதிகமாகவில்லை யென்றும், நீர்மட்டும் நீக்கப்பட்டபாலாவது (Whole—Milk Powder) கல்லீரலாவது (Liver) அதிகமாகக்கொடுக்கப்பட்ட எலிகள், அவ்விரண்டுணவுகளிலொன்று அதிகமாகக் கொடுக்கப் படாதவைகளைக்காட்டிலும், இரட்டிப்புக்காலம் சந்ததியுண்டுபண்ணும்சக்தி (Virility) யுடையவைகளாயிருக்கின்றனவென்றும் கூறுகின்றார்.

அவர், உணவுவகைகளில் உடம்பின்சதை எலும்பு நரம்பு முதலிய பகுதிகளுக்கு அவசியமான சத்துக்களெல்லாம்வேண்டிய அளவிலிருக்கவேண்டுமென்றும்* அந்த உணவுவகைகளைக் குறைந்த அளவில் உட்கொள்ளுவதால் ஆயுள்நீடிக்கின்றதென்றும் மனிதரது எண்பது அல்லது நூறுவயதுக்குச்சரியான எண்ணூறு அல்லது ஆயிரம்நாள் வயசுள்ள எலிகள் பாதியளவுணவுகள் கொடுக்கப்பட்டவை உடல் சிறுத்தவைகளாயிருந்தாலும் பூரண சுகம் (Perfect health) உடையவைகளாயிருக்கின்றனவென்றும் மறுபடி அதிக அளவு உணவு கொடுக்கப்பட்டால் உடல் வளர்ந்து சற்றுக்குறையப் பூரண ஆகிருதியடைகின்றனவென்றும், குறைந்த உணவு கொடுக்கப்பட்ட ஓர் எலி, மனிதரது நூற்றுநாற்பத்து மூன்றுவயசுக்குச் சமானமான ஆயிரத்துநானூற்று முப்பதுநாள் வரை வாழ்ந்ததென்றும் கூறுகின்றார்.

---

* இந்திய உணவுப்பொருளைப் பற்றியவிவரம் இதனடியிற்குறித்த புத்தகத்திற் கூறப்பட்டிருக்கிறது.

Health Bulletin No. 23.

The nutritive value of Indian Foods and the Planning of satisfactory diets (Revised and Enlarged) 1938.

Published by the Manager of Publication, Delhi.
Printed by the Manager, Government of India Press, Simla. 1939.

Price Annas 2 or 3

அவர், குறைந்த அளவு உணவுகொள்வோர் ஆயுட்குறை வுடையவர்களாயிருந்தால், அதற்குக்காரணம், அந்த உணவு வேண்டிய அளவுக்குப் பாதிக்குங்குறைவாயிருப்பதும் உடம்புக்கு வேண்டிய சத்துக்கள் குறைவாயிருப்பதுமாமென்று கூறுகிறார்.

அவர் உணவு சம்பந்தமாகக்கூறுவது, நம்முன்னோர், வயிறு கொள்ளக்கூடிய அளவில் அரைவாசியிடம் உணவும் கால்வாசி யிடம் நீரும் எஞ்சிய கால்வாசியிடம் வெற்றிடமுமாயிருக்கும்படி உண்ணுவது சுகாதாரவிதியென்று கூறியிருப்பதை ஒருவாறு ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

எந்த ஒருபொருள் இல்லாததானால், மற்றெல்லாப்பொருள்க ளும் இருந்தும் இல்லாதனவாகுமோ, அந்த ஒருபொருளாகிய உயிர்வாழ்வை அதிகப்படுத்துவதினும் சிறந்தது யாதுமில்லை யென்பது மறுக்கக்கூடாதது. அப்படிப்பட்ட உயர்தனிச்சிறப் புடைய உயிர்வாழ்வை நீட்டிக்கும் உபாயங்களைக் கண்டுபிடிப்பதி னும் சிறந்தமுயற்சி ஒன்றுமில்லையென்பது ஒருதலை. அத்தகைய உத்தமமுயற்சியாகிய ஆயுள்நீட்சி ஆராய்ச்சியின் முக்கியத்தை யறிந்து, அதைத்தொடுத்து நடத்துதற்கு உதவியாக, ராக்பெல்லர் தருமத்தாபன (Rockefeller Foundation) நிதிநிர்வாகிகள், அறு பதினாயிரம் டாலர்கள்* நன்கொடையளித்திருக்கிறார்கள்.

---

* டாலர், அமெரிக்கநாணயம். ஒரு டாலர் மூன்றுரூபாய் பெறுமான முள்ளது.

௨

விஞ்ஞானமுன்னேற்றம்*

[ஸ்ரீ: பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.]

நவீன விஞ்ஞானம் ஒவ்வொருநிமிஷமும் ஓங்கிவளர்ந்துவருகிறது. ஆயினும், சிலர், 'விஞ்ஞானம் தீமைவிளைப்பது, ஆதலால் அது தீது; அது முன்னேறுவதும் அவசியமேயன்று, தீயோர் நட்புப்போல் அதன் வளர்ச்சி நமக்கு என்றென்றும் தீங்கையே விளைவித்துக்கொண்டிருக்கும்' என்று குறைகூறுகிறார்கள். உண்மையில் விஞ்ஞானம் நன்றா? தீதா?

வலிமிக்க பஸ்மாசுரன் தவஞ்செய்தான். தெய்வம் மனமகிழ்ந்து 'நீ கேட்டவரத்தை அளிப்பேன்' என்றது. 'யார்தலையில் நான் கையைவைத்தாலும் அவர் உடனே நீறாய்ப்போகவேண்டும்' என்று அவன் வரங்கேட்கவே தெய்வமும் அவ்வரத்தை அருளிற்று. 'உன்தலையிலேயே கையைவைத்துச் சோதிப்பேன்' என்று பஸ்மாசுரன் கூறித் தனக்கு வரமளித்த தெய்வத்தையே அழிக்க முயன்றான். அத்தெய்வமும் அஞ்சி ஓடவேண்டியதாயிற்று. இறுதியில் தானே தன்தலையிற் கையைவைத்துக்கொண்டு அவன் மடிந்தான்.

இராவணன் கும்பகருணன் விபீஷணன் ஆகிய மூவரும் நற்குலத்தில் தோன்றியவர்கள்; கற்றுணர்ந்தவர்கள். மூவரும் தவஞ்செய்தார்கள். மனிதரை இகழ்ந்த இராவணன் தான் கேட்ட வரம் பெற்றான். நித்தியத்துவம் விரும்பிய கும்பகருணன் தன்னுடைய லக்ஷியம் தவறி நித்திரையைப் பெற்றான். அவர்கள் இருவரும் சிலகாலம் சிறந்துவாழ்ந்தார்கள். இறுதியில் அழிந்துபோனார்கள். தெய்வபக்தி ஒன்றையே நாடித் தவஞ்செய்த விபீஷணனே அரசு பெற்றான், சாகாமையும் பெற்றான்.

தவம் நன்றா? தீதா?

---

* இது, சென்னை அகில இந்திய ரேடியோநிலையத்திலிருந்து 3-11-42-ல் ஒலிபரப்பப்பட்டது. அதிகாரிகள் அநுமதிபெற்றுப் பிரசுரிக்கப்பட்டது.

பஸ்மாசுரன் இராவணன் கும்பகருணன் போன்றவர்களைக் கொண்டு தவத்தைக் குறைகூறுபவர் யாருமில்லை. அவர்கள் தீய வழிச்சென்றது தவத்தின் குறையன்று, அவர்களுடைய மனநிலை யின் குறையேயாகும்.

தவத்தைப்போன்றதே விஞ்ஞானமும். தவத்தைப்போல் விஞ்ஞானமும் ஆற்றல் அளிப்பது; வாழ்க்கையை மேன்மைப்படுத்து வது. நம்முடைய மனநிலைக்கு ஏற்ப அதை நன்மைக்கோ தீமைக் கோ நாம் பயன்படுத்தலாம். நம்முடைய மனத்தை நாம் பண் படுத்திச் சீரிய மனநிலையை அடைவோமானால் விஞ்ஞானத்தால் நமக்குக் கிடைக்கும் சக்தியைக்கொண்டு இவ்வுலகத்தை நரகத் துக்கு ஈடாக்கும் வறுமையையும் பிணியையும் பெரும்பாலும் நீக்கிவிடலாம். ஊண் உடை உறைவிடம் ஆகிய மூன்றும் நமக்கு இன்றியமையாதவை. இம்மூன்றுவிஷயத்திலும் விஞ்ஞானமுன் னேற்றம் நமக்கு மிகமிகப் பயனளித்திருக்கிறது.

நம்முன்னோர்கள் ஒருகாலத்தில் காட்டிற் கிடைத்ததைப் பொறுக்கி உண்டுவந்தார்கள். நாம் இப்பொழுது வேண்டிய செடி கொடி மரங்களைப் பயிராக்கி அவற்றின் விளைவுகளை உணவுப் பொருள்களாகக் கொள்ளுகிறோம். பூமியில் ஓரிடத்தில் வாழும் நாம் மற்றோரிடத்தில் விளையும் உணவுப்பொருள்களைப் பெறுகி றோம். வருஷம் ஒருமுறை அல்லது இரண்டுமுறை விளையும் உணவுப்பொருள்களை வருஷம் முழுவதும் உபயோகித்துவருகி றோம். பயிராக்குதல், இடம் மாற்றுதல், சேமித்துவைத்தல் ஆகிய இம்மூன்று துறைகளிலும் நவீன விஞ்ஞானவளர்ச்சி உதவிபுரிகிறது. பயிரின் வளர்ச்சிக்குவேண்டியவாறு சீதோஷ்ணநிலைகளை வெப்பம் ஒளி மின்சாரம் முதலியவற்றால் மாற்றும் முறைகள் இப்போது அறியப்பட்டுள்ளன. குளிர்நாட்டுப் பயிர்களை உஷ்ணநாடுகளிலும் உஷ்ணநாடுகளில் வளரும் செடிகளைக் குளிர்நாடுகளிலும் விளைவிக்க முடிவதால் நமக்குவேண்டிய பயிரைப் பல இடங்களிலும் பயிராக்க முடிகிறது.

புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட சில இரசாயனப்பொருள்களைச் செடிகளுள் புகுத்துவதால் அச்செடிகளை வேண்டியவாறு மெது வாகவோ விரைவாகவோ வளரச்செய்யமுடிகிறது. மழை பனி வெயில்களால் சேதமுறுமல் உரிய பருவத்தில் அவற்றைப் பலன் கொடுக்கச்செய்யமுடிகிறது. மேலும் இம்மருந்துப்பொருள்களா லும் எக்ஸ்ரேகிரணங்கள் முதலியவற்றுலும் பயிர்களில் நமக்கு உதவும் பகுதியாகிய வேரையோ தண்டையோ இலையையோ பூவையோ காயையோ மிகப் பெரும் அளவில் வளருமாறு தூண்ட முடிகிறது. 'கரும்புபோல் வளர்ந்து ஒருதாளிற் படிநெல் காய்க்கும் நெல்லைப் பயிரிடுவது முடியாதகாரியம்'என்று சொல்வதற்கு இல்லை.

தாவர ஆராய்ச்சியாளர்களின் நுண்ணிய கருவிகளின் உதவி யால் நூதனமான காய்கனிவகைகளை இயற்றமுடிகிறது. விதை யில்லா ஆரஞ்சும், பன்னீர்மணங்கமழும் ஆப்பிளும் இவற்றுள் சில. ஓர் இடத்தில் விளையும் காய்கனி முதலியவை மற்ருேரிடத்தில் விளைவதில்லை; ஒரு பருவத்தில் விளைபவை மற்றொருபருவத்தில் விளைவதில்லை. இவற்றை உலகமுழுதும் வருஷமுழுதும் உபயோகிப் பதற்கும் நவீன விஞ்ஞானம் உதவியிருக்கிறது. காய்கனிகளின் பெரும்பகுதி—நூற்றுக்குத் தொண்ணூறுபங்கு-தண்ணீராக உள் ளது. தக்கமுறைகளால் காய்கனிகளைச் சுவறச்செய்தால், இவை சுவைகெடாதபடியும் இவற்றிலுள்ள வைட்டமின் உணவுச்சத்துக் கள் அழியாதபடியும் பாதுகாக்கலாம். இவற்றிலிருக்கும் அதிகப் பயனற்ற நீர்ப்பகுதிமட்டும் நீங்கிவிடும். பிறயாவும் கெடாதிருக்கும். இந்நிலையில் இவற்றின் அளவும் எடையும் குறைந்துவிடுமாதலால் இவற்றை ஓரிடம்விட்டு மற்ருேரிடத்துக்கு எடுத்துச்செல்வது மிகவும் எளிதாகிறது.

காய்கனிகள் வெகுசீக்கிரம் அழுகிக் கெடுவதால் அவற்றைப் பறித்து அதிகநாளாகுமுன் உபயோகிக்கவேண்டியிருக்கிறது. நவீன விஞ்ஞானிகள் குளிர்ச்சியால் அவை அழுகுவதைத் தடை செய்கிருர்கள். குளிர்ச்சிமிக்க இரசாயனப்பொருள்களால் அவற் றை அப்படியே உறைந்து விறைத்துப்போகச்செய்கிருர்கள்.

வேண்டும்போது அவற்றைச் சீரானநிலக்குக் கொண்டுவந்து உபயோகிக்க இயலுகிறது.

நவீன விஞ்ஞானிகள் மக்களது உடல்நிலையறிந்து ஏற்றவையான புதுப்புது உணவுப்பொருள்களை இயற்றித்தருகிறார்கள். புதுச்சுவைகளையும் புதுமணங்களையும் இவற்றிற் புகுத்துகிறார்கள். உடலுக்கு இன்றியமையா இரசாயனப்பொருள்கள் வைட்டமின்கள் முதலியவை இவற்றில் இருக்குமாறு நவீனமுறைகளால் இவர்கள் செய்துதருதலாற் பல்சுவையுண்டியை நாம் பயன்பட உண்ண இயலுகிறது.

பயிருக்குத்தக்கவாறு நிலத்தை மிகச் செம்மையாகப் பண்படுத்தி உரமிடும் முறைகளைக் கண்டுபிடித்தும், உழுதல் தண்ணீர் பாய்ச்சுதல் முதலியவற்றுக்கு வேண்டிய கருவிகளை மேன்மேலும் சிறந்தமுறையில் அமைத்தும், செடிகளைப் பாழாக்கும் பலவகைப் பூச்சிகளை அழித்தும், துணைசெய்யும் பூச்சிகளைப் பாதுகாத்தும், மண்இல்லா இடத்திலும் செடிகளை வளரச்செய்தும் வருகிற விஞ்ஞானிகள் விவசாயிகளுக்குச்செய்துள்ள உதவி கொஞ்சநஞ்சமன்று.

உதவாப்பொருள்களை உணவுப்பொருள்களாக அவர்கள் மாற்றுவது, நாம் எண்ணியெண்ணி வியத்தற்குரியது. மரத்தூளையும் துண்டுகளையும் விலங்குணவாக மாற்றல், குமட்டும் ஆமணக்கெண்ணெய், நாற்றம்வீசும் பருத்திவிதையெண்ணெய் முதலியவற்றைச் சுவையும் மணமும் சத்தும் உள்ள நல்லுணவாக்கல் முதலியன நவீன விஞ்ஞானிகள் செய்துள்ள உதவிகளிற் சில.

ஆதிகாலத்தில் 'ஆடையின்றி வாடையின்மெலிந்து, கையது கொண்டு மெய்யதுபொத்திக் காலதுகொண்டுமேலதுதழுவி' வாழ்ந்த நம்முன்னோர்கள் பலவகை மிருகங்களின் தோலையும் மாவுரியையும் ஆடையாக அணியக் கற்றார்கள். பிறகு நாளடைவிற் சணலும், பருத்தியும் பட்டும் கம்பளியும் நமது ஆடைக்கு உரிய பொருள்களாக இருந்துவந்தன. சிறிதுகாலத்திற்குமுன்பு செயற்கைப்பட்டை

இயற்ற இரசாயனிகள் கற்றுக்கொடுத்தார்கள். இவை நீரில் நனை வன, நெருப்பில் எரிவன, பூச்சிகளால் உண்ணப்படுவன, நாளடை வில் மெருகிழந்து கந்தையாவன. இவ்வாறு ஆகாதபொருள் ஒன்று நமக்கு ஆடைப்பொருளாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! நவீன விஞ்ஞானிகள் இத்தகைய பொருளை இயற்றிவிட்டார்கள். அது என்னவென்று நினைக்கிறீர்கள்? அதுதான் கண்ணாடிப் பஞ்சு.

ஓர் இராத்தல் கண்ணாடியை இழையாகச்செய்தால் மூவாயிரம்மைல் நீளமுள்ள கண்ணாடிநூல் ஆகிறது. மயிரினும் பன் மடங்கு மெல்லிய கண்ணாடியிழைகள் இவ்வாறு செய்யப்படுகின் றன. கண்ணாடிநூல் நூற்கும் எந்திரசாலையொன்றில் நாள்தோறும் ஆறுகோடிமைல் நீளமுள்ள நூல் நூற்கிறார்களாம்! இந்தக்கண்ணா டிப்பஞ்சிழை தண்ணீரால் நனைவுறாது, அழுகாது, நெருப்பில் எரி யாது, அதை அணைக்கவும் உதவும். பூச்சிகளும் இதை அணுகுவ தே கிடையாது. இப் பஞ்சிழையை நூலாக நூற்று நெய்த துணி மிகவும் பளபளப்புள்ளதாயும் நெருப்புப்பற்றாததாயும் கதகதப் புள்ளதாயும் இருக்கும். வேண்டியநிறமுள்ளதாக இதைச் செய்வ தும் எளிது. ஆனால் இது பட்டாடையைப்போல் வேண்டியவாறு சுருங்கி நீளாது. இது இதற்குள்ள ஒருகுறைதான். இந்தக்குறையை நீக்கமுடியுமா? நித்தியப்படி உடுப்பதற்கு இக்கண்ணாடியாடை உதவுமா? யார் கண்டார்கள்? கண்ணாடியுடையை உடுத்தால் உடல்முழுதும் தெரியாதா? இதற்கு ஆடை உடுப்பானேன்? என்று கேட்கத்தோன்றும். வேண்டிய அளவு உடலைமறைக்கும்படியாகக் கண்ணாடியைச் செய்யமுடியும். மெல்லிய மஸ்லின் ஆடையைப் போலவோ அல்லது தடிக்கம்பளியைப்போலவோ கண்ணாடியைச் செய்துகொள்ளமுடியும்.

ஆதிகாலத்தில் நம்முன்னோர்கள் மரப்பொந்துகளிலும் குகைகளிலும் வாழ்ந்தார்கள். இப்பொழுது தரத்துக்கேற்றவாறு குடிசைமுதல் மாளிகைவரையிற் கட்டி வாழுகிறார்கள். எனினும் இவை முற்றிலும் திருப்தியாக இன்னும் அமையவில்லை. இவை

நெருப்புக்கு இரையாகின்றன; பூகம்பங்களால் அதிர்ந்துவிழுகின்றன; வெடிகுண்டுகளால் தகர்த்தெறியப்படுகின்றன. காற்றுக்காக ஜன்னல்வைத்தால் வெயிலும் மழையும் உள்ளே நுழைகின்றன. உள்ளிருப்பவர்களுக்குப் போதிய மறைவும் இருப்பதில்லை.

இக்கால விஞ்ஞானிகள் கல்லினும் உறுதியான சிமெண்டையும் இரும்பையும் உபயோகித்து அழியாவீடுகள் கட்டுகிறார்கள். இவற்றிலுள்ள கண்ணாடிக்கற்களால் ஆகிய சுவர்கள், வெளிச்சத்தை உள்ளே விடுகின்றன; மழையையும் காற்றையும் பிறர் பார்வையையும் வேண்டா ஒலிகளையும் தடுக்கின்றன. இவற்றின் உள்ளே வைத்திருக்கும் எந்திரங்கள் இங்குள்ள அறைகளை உடலுக்கு இதமான சீதோஷ்ணநிலையில் வைப்பதோடு, தூசியற்ற நல்லகாற்றையும் உள்ளேவிடுகின்றன; கெட்டகாற்றை அகற்றுகின்றன. என்றும் பளபளப்புள்ள மங்காத உலோகங்களாற் செய்யப்பட்ட நாற்காலி மேஜை முதலிய தட்டுமுட்டுச் சாமான்களும், கண்ணுக்குச் சிறிதேனும் கெடுதல்செய்யாத வெள்ளொளிவீசும் விளக்குகளும், அயல்நாட்டுச்செய்திகளைச் சொல்லும் ரேடியோவும், அவற்றைக் கண்ணெதிரே காட்டும் அற்புதக்கருவிகளும் இவற்றில் அமைந்திருக்கின்றன.

இவ்வளவும் செய்துதரும் விஞ்ஞானம் மேன்மேலும் முன்னேற்றம் அடையத்தானேவேண்டும்? அமிர்தம்போன்ற உணவை உண்டு, ஒளிவீசும் மிக மெல்லிய ஆடை உடுத்து, அழிவில்லா மாளிகைகளில் இன்பமாகவும், மன அமைதியோடும் நாம் வாழ்வோமானால் இவ்வுலகம் தேவலோகமாக ஆகிவிடுமன்றோ?

அகநானூறு*

[சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத்தலைவர்
ராவ்ஸாஹிப் ஸ்ரீ. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.]

காதலுணர்ச்சி தோன்றாதகாலம் இல்லை; அது தோன்றாத இடமில்லை. அதனுடைய ஆச்சரியமான சக்தியினால் இயக்கப் படாத உயிரினமும் இல்லை. மக்கள் அநாகரிகமாய் வாழ்ந்துவந்த காலந்தொட்டு இன்றுவரை இக்காதல் அவர்கள்மனத்தில் நிலைத்து வந்திருக்கிறது. மக்களை விட்டுவிட்டு, அவர்களுக்குக் கீழ்த்தரமா யுள்ள பிராணிகளை எடுத்துக்கொண்டாலும் இவ்வுணர்ச்சியானது வியாபித்தேவந்திருக்கிறது. இனி எக்காலத்திலாவது இவ் வுணர்ச்சி மறைந்துவிடலாம் என்று நினைப்பதற்கும் இடமில்லை. ஆகவே இது நித்தியம் என்று சொல்வதில் என்ன தடை?

ஆனால் இந்த நித்தியப்பொருளினுடைய தோற்றம் ஒரே படியாய் இருப்பதில்லை. மக்களுடைய நாகரிகத்துக்கும் பழக்கவழக் கங்களுக்கும் தக்கபடியும், இடம் காலம் முதலியவற்றிற்குத் தக்க படியும் வேறுபடுகிறது. இந்தக் காலத்தை எடுத்துக்கொண்டோ மானால் சினிமா அரங்குகள், நாடக அரங்குகள், ஆண்களும் பெண் களும் சேர்ந்துழைக்கநேரிடும் பற்பல துறைகள் இவற்றிலெல் லாம் காதல்நிகழ்ச்சிகள் நிகழ்வதைக் காண்கின்றோம். மதங்கள் முன்னேற்றம் அடைந்து, இருபாலாரையும் தம்வசமாக இழுத்து அவர்களை இயக்குவித்த காலத்திலே, கோயில் குளங்கள்கூடக் காதலுக்கு நிலைக்களமாக இருந்ததை நாம் படித்திருக்கிறோம்.

---

* இது, சென்னை அகில இந்திய ரேடியோநிலையத்திலிருந்து 12-11-42ல் ஒலிபரப்பப்பட்டது. அதிகாரிகள் அநுமதிபெற்றுப் பிரசுரிக்கப்பட்டது.

அக்காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்குமுன்பு, சமய ஆசாரங்களும், சமுதாயக் கட்டுப்பாடுகளும் அத்தனையாக முதிர்ந்து இருக்கவில்லை. தமிழ்நாட்டில்மட்டுமன்று; எல்லா நாடுகளிலும் இப்படியே. ஜனங்கள் தட்டுத்தடை அதிகமில்லாமல், ஒருவரோடொருவர் உறவாடிவந்தனர். பொதுப்படையாக இயற்கையோடு ஒட்டியநெறியில் ஜனங்கள் வாழ்ந்துவந்தார்கள் என்று சொல்லலாம். அந்தப் பழையகாலத்தில் தமிழ்நாட்டில் எவ்வகையான காதல்நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று தெரிந்துகொள்வதற்கு நாம் விரும்புவது இயற்கையல்லவா? அந்நிகழ்ச்சிகளைக் கூறும்நூல்களுள் மிகப் பெரியநூல் அகநானூறு; இதை நெடுந்தொகை என்றும் சொல்லுவது உண்டு.

இந்நூல் ஒரு புலவரால் செய்யப்பட்டதல்ல. 144 புலவர்கள் பற்பல சமயங்களில் பாடிய 400 செய்யுட்களைக்கொண்டது இந்தப் பழையநூல். இப்படிப் பல புலவர்களால் இயற்றப்பெற்று ஒருவரால் தொகுக்கப்பட்டதனாலே, இதைத் தொகைநூல்களுள் ஒன்று என்று சொல்லுவார்கள். இதைத் தொகுக்கும்படியாகக் கட்டளையிட்டவன் உக்கிரப்பெருவழுதி என்ற ஒரு பாண்டிய அரசன். இந்நூலில் அடங்கிய செய்யுட்களில் மிகச் சிறியவை 13 அடிகள் கொண்டவை. மிகப்பெரியவை 31 அடிகள் கொண்டவை. போர் முதலிய விஷயங்களைப் புறம் என்று சொல்லுவ்தும், காதல் முதலிய விஷயங்களை அகம் என்று சொல்லுவதும் தமிழ்ப்புலவர்களுடைய வழக்கம். அதனாலேதான் இந்த நூலுக்கு அகநானூறு என்று பெயர்.

இந்த நூலிலும் அகத்தைப்பற்றிக்கூறும் மற்றச் சங்கநூல்களிலும் வருணிக்கப்படுகிற காதற்காட்சிகளுக்கும் இவற்றிற்குச் சுமார் 500 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட நூல்களில் வருணிக்கப்படுகிற காதற்காட்சிகளுக்கும் அதிக வேறுபாடு உண்டு. பிற்பட்ட நூல்களில் உள்ள காட்சிகள் நாடக அரங்கிலுள்ள நடிப்புக்களே. இவற்றில் ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் தன்னந்தனியாக

ஒருசோலையிலே சந்திப்பது; அங்கே பெண்மகளைப் பார்த்தவுடன் ஆண்மகன் 'இவள் பூமியிலுள்ளவளோ? தெய்வலோகத்திலுள்ளவளோ? நாகலோகத்தில் உள்ளவளோ?' என்று சந்தேகப்படுவது; பின்னால் சில காரணங்களைக்கொண்டு இவ்வுலகத்தில் உள்ளவள் தான் என்று துணிவது; இவைபோன்ற பல விநோதக் காதல் நடிப்புக்கள் உள்ளன. இவைகள் வாழ்க்கையிலே உண்மையாக நிகழக்கூடியவையல்ல. இவை நகைச்சுவைக்குத்தக்க எடுத்துக் காட்டாகுமே தவிர, உண்மையென்றோ கவிச்சுவையுடையதென்றோ கொள்ளமுடியாது. ஆனால் அகநானூறு முதலிய நூல்களில் வருகின்ற காதல்நிகழ்ச்சிகள் வாழ்க்கையிலே நிகழக்கூடியவைகளாகும். கவித்துவரீதியில் உண்மை என்று கருதக்கூடியவையாகும். சிலபொழுது அவை உயர்ந்த லட்சியங்களைக் காட்டுவதாக இருக்கலாம். ஆனாலும் அவை முற்றும் இயல்பானவை என்பதும், உண்மையானவை என்பதும் மறுக்கமுடியாத விஷயங்கள்.

இங்கே கூறிய உண்மையைப் பின்வரும் உதாரணங்களிற் காணலாம்.

'யாக்கைக்கு, உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே'

என்று அகநானூறு (339) கூறுகின்றது. யாக்கை என்றால் உடம்பு என்று பொருள். உடம்பும் உயிரும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாய் உள்ளன. இவையிரண்டும் தொன்றுதொட்டு வேற்றுமையில்லாமல் கலந்தே வருவன. இவை இரண்டும் இன்பதுன்பங்களைச் சமமாக அனுபவிப்பன. அவ்வாறே கணவனும் மனைவியும் வேற்றுமையின்றி இருப்பவர்கள்; இன்பதுன்பங்களை ஒருமிக்க அனுபவிப்பவர்கள்; ஒருவருக்கொருவர் இன்றியமையாது உள்ளவர்கள். இப்படியாக இந்த அடிகளின் பொருளை விளக்கலாம். ஆனால் இந்தப் பொருள்விளக்கமெல்லாம் உவமானத்தின் நயத்தை

முழுவதும் எடுத்துக்காட்டிவிடுவதாகாது. இந்த உவமானத்தைச் சொல்லுந்தோறும், சொல்லுந்தோறும் புதிதான ஓர் இன்பத்தை நாம் அடைகிறோம். இந்த நயத்தை உணர்ந்தே தமிழ்வேதம் செய்த திருவள்ளுவரும்,

'உடம்போ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு'.

என்று கூறுகின்றார்.

'வாழ்தல் அன்ன காதல்', 'சாதல் அன்ன பிரிவு'—இவை எத்தனை பொருட்பொலிவுள்ளனவாக அமைந்திருக்கின்றன. ஆழ்ந்த சிருஷ்டி - ரகசியம் ஒன்று இவற்றில் பொதிந்துகிடக்கிறது. ஆனால், இச் சொற்களில் ததும்புகிற உணர்ச்சியும் வேகமும் அழகும்தான் நம்மை முக்கியமாகக் கவர்கின்றன. இம்மூன்றும் பாரதியின் பாடலில்,

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்'

என்று வரும் அடிகளிலும் தோன்றி உள்ளக்கடலின் அடிநிலத்தைத் தொட்டுவிடுகின்றன. இப்படிப்பட்ட உத்தமமான காதல் வாழ்வுவாழ்ந்தவர்கள் எவ்வாறு ஒருவரையொருவர் காதலிக்க நேர்ந்தார்கள் ?

மாலைப்பொழுது. கடற்கரை. அங்கே வாழ்ந்துவந்த சிறுபெண்களின் சிறுகூட்டம். அவர்கள் மணலிற்சிறுவீடு அமைத்தும், சிறுசோறு சமைத்தும் விளையாடிவந்தார்கள். தளர்ந்து ஓரிடத்து உட்கார்ந்தார்கள். கல்விகற்று மெலிவதற்குரிய கலாசாலைகள் முற்காலத்தில் இல்லையல்லவா? அதனால் இப்பெண்கள் அனைவரும் உடல்நலங்குன்றாமல் இளமை தளிர்த்துவிளங்க, அழகு சோபிக்கக் கூடியிருந்தனர். அப்பொழுது ஆண்மகன் ஒருவன், புருஷலட்சணங்கள் பலவும் பொருந்தியவன், அங்கே வரநேர்ந்தது. பெண்கள் கூட்டத்தில் ஒருத்தியைக்கண்டதும் அவனுடைய மனத்திலே

என்றுமில்லாத ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. மனத்தைப் பறிகொடுத்ததுபோன்ற ஒரு தளர்ச்சி. இத்தளர்ச்சி உடம்பிலும் தாக்கிவிட்டதுபோல உணர்ந்தான். அப்பெண்களை நோக்கிப் 'பொழுதுபோய்விட்டது. எனக்குச்சோர்வாக இருக்கிறது: நீங்கள் சமைத்துவைத்திருக்கும் உணவுகிடைத்தால் மிகவும் உபகாரமாயிருக்கும்' என்றான். இதைக்கேட்டதும் அப்பெண்கள் முகத்தைக் கவிழ்த்து, ஒருவர்முதுகின்பின் ஒருவர் ஒடுங்கியிருந்துகொண்டு, 'இந்த உணவு உங்கள்போன்றவர்களுக்கு ஏற்றதல்ல' என்று சொல்லினர். சொல்லிவிட்டு உடனே, 'அதோ ஒருகப்பல் வருகிறது. அதைப் பார்க்கப்போவோம்' என்று தம்முள் கூறிக்கொண்டு தாங்கள் அமைத்த சிறுவீடு முதலியவற்றைக் காலினாலே அழித்துவிட்டு அனைவரும் ஓடிவிட்டார்கள். ஓடிவிட்டவர்களுள் தான் முன் பார்த்த ஒருத்தியை மீளவும் உற்றுநோக்கி 'நான் போகட்டுமா?' என்று வருத்தத்துடன்சொல்லி அந்த ஆண்மகன் தயங்கிநின்றான். அப்படி அவன் நின்றதோற்றம் அந்தப்பெண்ணின் கண்ணுள் நின்றுகொண்டேயிருந்தது. இந்த முறையிலே நேர்ந்த காதலின் பயனாகத்தான் அவர்கள் இருவரும் மணம்முடித்துக் காதல்வாழ்வு வாழ்ந்துவந்தனர். இச்சித்திரம் அகநானூற்றில் 110-ஆம் செய்யுளில் வரையப்பட்டுள்ளது.

இச்செய்யுளை இயற்றிய புலவன் தன் இதயம் நிரம்பிய உணர்ச்சியிலே எழுதுகோலைத் தோய்த்து எழுதினான் என்றுதான் நாம் சொல்லவேண்டும். 'ஒருவர்முதுகின்பின் ஒருவர் ஒடுங்கியிருந்துகொண்டு' என்றது நமதுநாட்டுச் சிறுபெண்களின் இயல்பை எத்தனை நன்றாக உணர்த்துகிறது! 'நான் போகட்டுமா?' என்று சொல்லி நிற்பவனது உள்ளத்திலே, எத்தனை வருத்தம் தேங்கியிருந்தது என்பதை யாரால் அளவிடமுடியும்!

காதல்வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்துவருவது இயற்கையே. காதலனைப் பிரிந்துவாழுங்காலத்தில் காதலியின் செயலைப் பாருங்கள். காதலன் எப்பொழுதுவருவான் என்று ஏங்கியு

வண்ணமாயிருக்கிறாள். இவ் ஏக்கம் மற்றவர்கள் அறிந்துவிடக் கூடாது என்று நினைக்கிறாள். இதனைக்குறித்துப் பிறரோடு பேசுவதற்கென்றாலோ மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனால் காதலோ கடல்போலக் கொந்தளித்து இதயக்கரையை மோதி அழித்து விடும்போல் இருந்தது. தான் அருமையாக வளர்த்துவரும் கிளியை முன்கையில் ஏந்தி 'இன்று வருவாரோ சொல்' என்று மழலை மொழியாற் சொல்லுகிறாள். பிறர்செவியிற் பட்டுவிடக்கூடாதென்று மெல்லப் பேசுகிறாள். ஆனால் அச்சொற்களிலே எத்தனை அன்பு!

இனி அகநானூறு கூறுவதைக் கேளுங்கள்:

'சேந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
இன்று வரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சோற் பயிற்றும்
நாணுடை அரிவை'

இச்செய்யுளை நினைக்கநினைக்க மனம் கனிவுறுகின்றது. இந்தச் செய்யுளைப்போல் எத்தனையோ அழகிய செய்யுட்கள் அடங்கிய நூல் அகநானூறு. இவற்றை நாம் உற்றுநோக்கினால், அங்கே உண்மையுணர்ச்சியும், கவியழகும், உயிர்த்தத்துவமும் துடிதுடித்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

இந்த நூலை நம் முன்னோர்கள் நமக்குத் திரட்டிவைத்துள்ள குலதனம் என்று சொல்வது மிகையா! நீங்களே சொல்லுங்கள்.

சேதுவேந்தர் பிறந்ததின வைபவம்

இராமநாதபுரம் இராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
திரு. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள்.

மாட்சிமைதங்கிய மஹாராஜா ஸ்ரீமத் ஹிரண்யகெர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத ராஜா ஸ்ரீ R. ஷண்முகராஜேஸ்வர நாகநாதசேதுபதியவர்களது 34-வது வெள்ளணிநாள்விழா, நிகழும் சித்திரபானுஸூ ஐப்பசிமீ மிக்க சிறப்புடன் கொண்டாடப்பட்டது. இராமநாதபுரம் எஸ்டேட்டு மானேஜர் மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் J. பாலாஜிராவ் B.A அவர்கள் தலைமையில் ஏற்பட்ட மகா-ா-ா-ஸ்ரீ ராஜகுமார் B. ராஜாராம்பாண்டியன் அவர்கள், ராஜகுமார் ஸ்ரீ காசிநாததுரையவர்கள் முதலியோரடங்கிய ஒரு பெருங்கழகத்தார் இக்கொண்டாட்டத்தை இனிது நடத்திவைத்தனர்.

இவ்விழாவின்சார்பில், 26-10-42 முதற் பந்துவிளையாட்டு முதலிய பலவகையான பந்தயவிளையாடல்கள் பலர் கண்டுகளிக்க நடைபெற்றன. ஸமஸ்தானத்தின் பலபகுதிகளையும் சார்ந்த பலர் சிலம்பம், கரகம், ஒயில், மற்போர், மாறுவேடம் முதலியவற்றிற் கலந்து போட்டியிட்டு விளையாடிச் சிறப்பித்தனர். நவம்பர்மீ 2உ மஹாராஜா அவர்கள்முன்னிலையில் வந்தவர்பலர்க்கும் சிந்தை குளிரும்படி ஆலத்தூர்சகோதரர், பிடில் இராசமாணிக்கம்பிள்ளை முதலியோர் இசையமுதூட்டினர். 5உ மாலை மஹாராஜா அவர்கள் ஸ்ரீமான் பாளையம்பட்டி ஜமீன்தாரவர்களுடைய அரண்மனை முன்றிலில் விவசாயப்பொருட்காட்சிச்சாலையொன்றைத் திறந்து வைத்தார்கள்.

சேதுவேந்தர்பெருந்தகையினது ஜென்மநக்ஷத்திரமாகிய ஹஸ்தநக்ஷத்திரம்கூடிய சுபதினம் ஐப்பசிமீ 21உ (6—11—42) வெள்ளிக்கிழமையாகும். அன்று, ஸமஸ்தானத்தைச்சார்ந்த எல்லா ஆலயங்களிலும் சிறப்பாகப் பூசனைகள் செய்யப்பட்டன. பகலில் ஆயிரக்கணக்கான வறிஞர்கட்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. இதனை மஹாராஜா அவர்கள் கண்ணுற்று மகிழ்ந்தனர். அப்பால் ஏழைமக்களாகிய ஆடவர் பெண்டிர் பலர்க்கு மன்னரவர்கள் தம் கரத்தால் ஆடைகள் நல்கினர். மாலை 8-30 மணிக்குச் சேதுபதி மஹாராஜா அவர்களது தர்பார் உரியமுறையில் நடந்தது. அதனிறுதியில் மன்னரவர்கள், 'பாஸிஸ்டுக்கூட்டத்தார் படுகொலைகள்

செய்து இன்புறுவதை நினைக்க நாம் திடுக்கிடாமலிருத்த லியலாது. மிலேச்சத்தனமான ஆக்கிரமிப்பினின்றும் சுதந்திரக்கொடியைக் காக்கும்பொருட்டு உதிரத்தைச் சிந்திக்கொண்டிருக்கும் எண்ணிறந்த வீரர்கள்பால் நம் மனம் அநுதாபம் காட்டுகிறது. சேதுநாட்டினராகிய நாம் இராமாயணகாலந்தொட்டு அறங்காக்கும் வீரர்களாயமைந்துள்ளோம். அவ்விதிகாசகாலத்திற் கொப்பாகவே இன்றும் நாம் சிறந்த செயல்கள் புரியவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இச்சமயத்தில் உலகின்கண்ணே சுதந்திரமும் அமைதியும் நிலவும்படி விரைவில் நேசநாடுகள் வெற்றிபெறவேண்டுமென்று நாம் இறைவனை மனமாரப் பிரார்த்திக்கிறோம்' என்னும் செய்தியை வெளியிட்டார்கள்.

22உ (7–11–42) சனிக்கிழமை மாலை இராமநாதபுரம் வைசிய இளைஞர்சங்கத்தார் மஹாராஜா அவர்களைத் தங்கள் சங்கத்தில் வரவேற்று, ஒருபசாரப்பத்திரமும் படித்துக்கொடுத்தனர். அவ்வமயம் மஹாராஜா அவர்கள் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். 'இராமநாதபுரம் ஸமஸ்தானவாசிகள் என்னை அதன் இறையென்று வேறுவைத்துப் போற்றுவர்: யான் அவர்கள் நலத்தை நாடுதற்கமைந்த தொண்டனாகக் கருதுகிறேன்' என்பது அச்சொற்பொழிவிடையே அவர்கள் புகன்ற பொன்மொழியாகும். இது ஊன்றிநோக்கி உள்ளியுள்ளி மகிழற்பாலது. அன்றிரவு மஹாராஜா அவர்கள்முன்னிலையில் நடந்த மாணவர் கதம்பக்கச்சேரி யாவர்க்கும் விடாநகைப்பை விளைவிப்பதாயிற்று. அற்றைநாளும் அடுத்தநாளும் சென்னைக் கிரிக்கட்டுக்கோஷ்டியாருக்கும் இராமநாதபுரம் மஹாராஜா அவர்களின் கிரிக்கட்டுக்கோஷ்டியாருக்கும் ஒரு சிறந்த பந்தயம் நடந்தது.

23உ (8–11–42) ஞாயிறன்று, திருச்சி வானொலிநிலையத்தைச் சேர்ந்த ஸ்ரீ நடராஜபிள்ளையவர்கள் சேதுவேந்தர்முன்னிலையில் தம் வேணுகானத்தாற் செவிக்கின்பமளித்தனர்.

நவம்பர் 9உ ஆங்கிலமுறைப்படி நம் சேதுவேந்தர் பிறந்த தேதியாகும். அன்று, மாதாகோயில்களிலும், மசூதிகளிலும் விசேடசெபங்கள் நிகழ்ந்தன. அன்று முற்பகலில், செந்தமிழ்ச் செல்வச் சேதுவேந்தரவர்கள், புலவர்கள்குழுவிடையமர்ந்து,

அவர்கள் உள்ளமுவந்து பாடிய *நாண்மங்கலப் பாடல்களைச் செவி மடுத்தேற்று, வரிசைக்குத்தக்க பரிசுகளும் வழங்கிச் சிறப்புச் செய்தனர். அப்பொழுது வடமொழி தென்மொழி வித்துவான்க ளும், கலையபிமானிகள் பலரும் வந்திருந்தனர். பாவலர்விருந்திற் குப்பிறகு காவலரவர்கள், அறுசுவைநிறைந்த அடிசில்விருந்திற் கலந்துகொண்டனர். மாலையில் ஒரு பொதுக்கூட்டம் சேதுவேந்த ரவர்கள்தலைமையிற் கூடியது. அப்பொழுது மஹாராஜா அவர் கள் தம் பிறந்ததினத்தைக் கொண்டாட இசைந்ததற்காக அவர் கட்கு நன்றிகூறி வாழ்த்தும்முறையில், எஸ்டேட் மானேஜரவர்கள் ஓரரிய சொற்பொழிவாற்றினார்கள். பின்னர், மஹாராஜா அவர்கள், ஓரரிய பெரிய உரைவழங்கித் தம்கையாற் பந்தயங்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பரிசுகளையளித்தார்கள். அவ்வுரையில், முன் னர்த் தாம் வைசிய இளைஞர்சங்கத்திற் கூறியவற்றைச் சுட்டிக் காட்டி வற்புறுத்தியதுடன், இவ்வைபவத்தைத் தமது பிறந்தநாள் வைபவமாக யாவரும் கொண்டாடினும், தாம் இந்நாட்டினரின் பிறந்தநாள் வைபவமாகக் கருதுவதாகவும், அதுவே தம்மை இக் கொண்டாட்டத்திற் கலந்துகொள்ள இசைவித்ததாகவும் மொழிந் தார்கள். மற்றும் பந்தயவிளையாட்டுக்களால்வரும் நன்மைகளை விளக்கியதோடு, 'தோல்வியில் தளர்வுறுது நகுதலே விளையாட்டின் வெற்றிவீரனுக்கடையாள'மாகுமென்றும் எடுத்துரைத்தார்கள். பிறகு, விழாக்கொண்டாட்டக்கழகக்காரியதரிசி ஸ்ரீ S. நரசிம் மையங்கார் வந்தனோபசாரம் கூறினர். இராஜபாளையம் போர்டு ஹைஸ்கூல் தலைமையாசிரியர் ஸ்ரீ K. S. சுப்பிரமணிய ஐயரவர்கள், சேதுவேந்தரவர்கள்திருவுள்ளத்துக்கிடந்த அரிய பெரிய கருத் துக்களை யாவரும் கேட்டறிந்து உவக்குமாறு, ஒரு சிறந்த சந்தர்ப் பத்தையுண்டாக்கி, இவ்விழாவை இனிது நடத்திய காரியக்குழு வின் தலைவர்க்கும், பிற அங்கத்தினர்களுக்கும் நன்றிபாராட்டி யுரைக்கக் கூட்டம் இனிது கலைந்தது.

10உ காலையில், சேதுமன்னரவர்களை, எஸ்டேட்டு உத்தியோ கஸ்தர்கள்யாவரும் வந்து கண்டு, தங்கள் விசுவாசத்தைப் புலப் படுத்திக்கொண்டனர். அன்றுமாலை ஸேதுஸமஸ்தானத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த கிராமத்தலைவர்கள் முதலியோர்க்கு

* இப்பாடல்கள் அடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

மஹாராஜா அவர்கள் காட்சியளித்தார்கள். அவர்கள், மன்னரவர்கட்குத் தாம் கொண்டுவந்த பழவர்க்கங்களையும், பூமாலைகளையும், உபசாரப்பத்திரங்களையும் ஸமர்ப்பித்துத் தம் இராஜவிசுவாசத்தைத் தெரிவித்துக்கொண்டனர். ஸேதுவேந்தரவர்கள், அவர்கள் காட்டிய அன்பைப் பாராட்டி, ஓர் உள்ளமுருக்கும் இன்னுரையால் உவப்பூட்டினர். அவர்கள் தாம் எவ்வதிகாரத்தையும் ஸேதுநாட்டு மக்களின் பிரதிநிதியாகவே யேற்கவிரும்புவதாகவும், தம்நலத்தினும் ஸேதுநாட்டுமக்களின் நலத்தையே சிறப்பாகநினைப்பதாகவும், ஸேதுநாடு என்றும் பொன்றுது நின்று நிலவுவதையே பெரிதும் கருதுவதாகவும் கூறி, யாவரும் எந்தமாறுதல்வேண்டினும் உள்ள சட்டதிட்டங்களுக்கு அடங்கிநின்றே அதனை அடைய முயலல் வேண்டுமேயொழிய அதனைக் கடந்தடைய முயலலாகாதென்றும், அவ்வடக்கமுடைமையே உயர்நிலையில் உய்க்குமென்றும் தம் முறையில் எடுத்துரைத்தனர். அதன்பிறகு, பாளையம்பட்டி ஜமீன்தாரவர்கள் அரண்மனைமுன்றிலில், கால்நடையிலாகா ஜில்லா அதிகாரி, ஸ்ரீ தேவநாயகம்பிள்ளையவர்களால் "கால்நடைகளைப் போஷித்தல்' என்பதுபற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அங்கு மஹாராஜா அவர்கள் விஜயம்செய்திருந்தார்கள். பின்னர் மாலை 8 மணிக்கு மஹாராஜா அவர்கள் முன்னிலையில், தஞ்சை லக்ஷ்மீநாராயணையர் முதலியோர் அளித்த இசையின்பம் மிகவும் பாராட்டத்தக்கது.

மறுநாட்காலையில், நாட்டுமக்கள், மஹாராஜா அவர்களைக்கண்டு நாடுமுழுதும் மன்னரவர்கள் விஜயம்செய்தல்வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு விடைபெற்றுக்கொண்டனர். அன்று மாலை ஒரு தேனீர்விருந்து நடைபெற்றது. ஒரு புகைப்படமும் எடுக்கப்பட்டது. இங்ஙனம் சேதுபதி மஹாராஜா அவர்களுடைய பிறந்தநாட்கொண்டாட்டவைபவம், சேதுநாட்டினரின் பிறந்தநாட்கொண்டாட்டவைபவமாகவும், சேதுவேந்தர்பெருந்தகையின் உள்ளத்துப் பொதிந்துகிடந்த சீரிய கருத்துக்களின் பிறந்தநாட்கொண்டாட்டவைபவமாகவும் செவ்விதின் நடந்தேறியது.

ஸ்ரீ:

மகா-ா-ா-ஸ்ரீ: மாட்சிமைதங்கிய ஸ்ரீமத். ஹிரண்யகர்ப்பயாஜி
ரவிகுல முத்துவிஜய ரகுநாத ராஜா

ஸ்ரீ ஷண்முகராஜேஸ்வர நாகநாதஸேதுபதிமகாராஜரவர்களது

முப்பத்துநான்காவது வெள்ளணிநாள்விழா

நாண்மங்கலக்கவிகள்.

ஸேதுஸமஸ்தான மஹாவித்வான் பாஷாகவிசேகரர்

ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள் பாடியவை.

1. காசிமுதல் ராமேசு வரம்வரைப் பலருணக்
கருதுசத் திரம்வைத்தவர்
கடலிற் றனுக்கோடி செல்லற் கறத்தோணி
கண்டுபகை யின்மைகண்டோர்

வாசமற வணியேந்தல் தில்லையம் பலமாடும்
வள்ளற் களித்தபெரியோர்
மருவுமர வணைமீது கண்வள ரரங்கர்க்கு
மல்லலாட் டூரளித்தோர்

தேசமுழு தும்பரவு தேவைத் திருக்கோயில்
செய்பணியெ லாநிறைத்துத்
தினமுங்கொள் பூசைக் கெனப்பலூர் நல்கியவர்
செம்பொன்வரை வளரிநட்டோர்

ஆசில்புல வோர்பரவு மறவஞ்சி முல்லைமிசை
யார்ந்தபுய வீரவேந்தர்
அம்மரபின் வந்தசண் முகராஜ மகராஜன்
அநவரதம் வாழிமாதோ.

2. திவியெலாம் புகழ்தனுக் கோடிதீர்த் தமுமாதி
சேதுவுஞ் சிலேயிராமன்
திப்பியத் தர்ப்பசய னமும்வடக் கண்ணுடு
சென்றுதொழு தேவைநகரும்
புவியெலாம் தொழுசேது பதியென்ற நாமமும்
பொருகடற் றீவிரேழும்
புனேவாச கங்கொளுத் தரகோச மங்கையும்
புகல்சுழிய லாடானேயும்
கவியெலாம் பரவுசெந் தமிழ்வ்வையை யும்பெரிய
கந்தமா தனவரைப்பும்
கருதுமன நிலேகாட்டு காவியிற் றுவசமுங்
காவல நினுதுசெல்வம்
அவியெலா முண்ணுமம ரேசனு மிவைகாணின்
அவ்வியங் கொள்வனம்மா
அருமருந் தன்னசண் முகராஜ மகராஜ
அநவரதம் வாழிநீயே.

3. தேவைரா மேசர்மலே வளர்காத லிப்பெணுமை
சீருலா வருவதற்குச்
செம்பொன்னி னெண்சிவிகை உம்பரார் புகழவே
செய்துவைத் துலகமெல்லாம்
நாவையா யிரம்வேண்டு மிதுபரா வற்கென்ன
நல்லவா வரணமெண்ணி
நாடட்ட பதபந்தி மண்டபம் நாற்புறமும்
நன்ரு வமைத்தசெல்வர்
பூவையாள் வேந்தருட் புண்ணியச் சேதுவைப்
புரவுபூண் சேதுபதியாய்ப்
பூதலத் திசைமிக்க மாதவத் தவர்புலவர்
புக்கிலா வாழுமன்னர்
காவைநேர் கொடையாள ராறுபா யூரெலாம்
கனஞ்செய்தரு மாதனஞ்செய்
காவலோர் மரபுசண் முகராஜ சேகரன்
கவின்மரபு வாழிமாதோ.

4. பூமிமுழு தும்பரவும் ராமதனுக் கோடிப்
புண்ணிய வரைப்பகநின் எண்ணிய புரப்பாம்
சேமமிகு தேவைவயி னிராமன்வழி பட்ட
தெய்வதநின் றெய்வமுயர் வேந்தரவி யங்கொள்
நாமமுன தாயதுயர் சேதுபதி யென்ன
நாடுபதி னுறுபல தீவுமுன தாகும்
காமர்புல வோர்குழுமு சங்கமொலி சங்கம்
காவல்புரி வாயிவையுன் கண்ணியமெம் வேந்தே.

5. திருந்துதரு மாதனமுஞ் சீவிதமுங் கோயிற்
செய்யவள வூர்களு மடப்புறமு மன்னம்
அருந்தவரு சத்திரநல் லூர்களு மறத்திற்
காக்கிய சிறப்புனது பாக்கியமி தல்லாற்
பெருந்தகைமை கொண்டபுல வோரினிது வாழப்
பேணியுத வும்வயலி னூர்களள வாமோ
இருந்தவ முளாரலது சேதுபதி யாதல்
எண்மையில யென்பருயர் வண்மையுள வேந்தே.

6. அங்கயிலை நந்திவழி வந்துசிவ ஞானம்
அம்புவியி னிற்பொழியு மாவடு துறைக்கண்
தங்குமடம் வாழ்கெனப்பொற் கோட்டையினை முன்னம்
தந்தபுகழ் சேதுபதி தங்கள்புக ழென்ப
தெங்குமறி வந்ததுயர் புண்ணியம் வளர்ப்ப
தென்றுகர கங்கண மியைந்தகுல நின்ன
திங்குவரு மூழியு மிருக்கவென ராம
னேற்றிய சிறப்பினினி தேறவளர் வேந்தே.

7. வந்தொரு துறைக்கவி வனைந்தபுல வற்கு
வண்பொனின்தெங் கம்பழம்பன் னூறுகொளவீசி
நந்துவள வூர்பலவு மந்தணர்க ளெய்த
நல்கிரகு நாதன்வழி மல்கவரு மைந்த
ஐந்தருவும் நன்சுரபி யும்புவியி னுள்ள
வாறெனநி னைப்பமுனை வேறுநினை யேமால்
செந்தமிழ் வளர்க்கவென வந்தபெரு மானே
சேதுபதி சண்முகரா ஜேச்வரவாழ் வாயே.

8. வந்தவய னெல்லினுயர் தன்மமகி மைக்கு
வாரமிது வென்றுமுனம் வைத்துவறி ஞர்க்குத்
தந்துபுல வோர்மகிமை சத்திரநன் றன்மம்
தங்குமட னன்மகிமை யென்றுபல நல்கிச்
சொந்தமென வெஞ்சியது கொண்டுல களிக்குந்
தூயபுகழ் சேதுபதி மேயபுக ழன்றோ
இந்தமுறை மேவியதுன் செம்பிவள நாடே
என்றுமிதை யாள்வைநிலை நின்றுபெரு வேந்தே.

9. மங்கல மங்கையர் முன்கை வளைப்பன
வண்கடல் நின்பணிலம்
மன்னவர் முன்றிலின் வைகறை யார்ப்பன
வாழ்நின் சலஞ்சலமே
அங்கையின் வைத்தன்னை மாரிள மைந்தரை
யார்த்துவ நின்சுரிசங்
கம்பல மாடல்செய் வாரரை மீதெழில்
ஆர்வது னக்குமணி
இங்குன் வலம்புரி நீரினி லாடுவ
எவ்வித தெய்வதமும்
இத்தகை மேன்மையி னுர்பிறர் வேந்தர்கள்
யாருளர் நின்னையலால்
எங்கள் தவம்மெனுஞ் சண்முகராஜ
வரோதய சேதுபதி
எங்குநின் நன்புக ழெய்த வளர்ந்தினி
தின்புடன் வாழியவே.

10. வஞ்சி சூடி மதுரை கொள்ள வந்த கன்ன டப்படை
அஞ்சி யோட நின்ற வீர ரணிவ குத்த புதுவைவென்
றெஞ்சி லாம றவணி யேந்த லினிய தில்லை யீசர்பால்
நெஞ்சி னல்கி யோர்த வத்தி னீள்க சேது மகிபனே.

இராமநாதபுரம் வித்வான் ராவ்ஸாஹிப்

ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள் பாடியவை.

1 குலந்தாங்கி மேலாங் குணந்தாங்கித் தெய்வ
பலந்தாங்கிப் பாரிலுயர் சேது—நிலந்தாங்கும்
நாகநா தேந்திரவிந் நன்னுடன் நாளணியாற்
போகநா டாகியதிப் போது.

2 ஊண்மங் கலமென் றுவந்தார் வறியவர் ஒண்பரிசால்
மாண்மங் கலமென்று வாழ்த்தினர் நாவலர் மன்னிசையோர்
பூண்மங் கலமென்று பூண்டன ராடல் புரிதருவோர்
நாண்மங் கலஞ்சண் முகராசன் பெற்றவிந் நாள்தனிலே.

3 திருவணிக்கு நாயகனே தேவைமன்னு நீயித்
திருவணித்துத் தேவையளிப் பாயுன்—அருமைசொலி
நள்ளிரவுங் கண்டுயிலாள் நாகநா தேந்திரநின்
வெள்ளணிநாள் கண்டவிசை மின்.

4 பன்னுதிரு வாண்டுமுப் பானுன்கு மும்மடியா
மன்னிறாற் றுண்டின்மேல் வாழியரோ—துன்னுகடல்
மண்முகமா மாமுகவை மன்நாக நாதேந்த்ர
சண்முகமால் ராஜேசன் தான்.

5 சேதுபதி சண்முகரா ஜேசா செயசீலா
தாதுபதி தண்முல்லைத் தார்மார்பா—நீதிகழிந்
நாண்மங் கலம் போல்வாழ் நாண்மங் கலமாகக்
காண்மங் களமங் களம்.

இராமநாதபுரம் இராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ J. நாராயணசுந்தரம் ஐயங்காரவர்கள் பாடியவை.

வண்முக வாபுரி வாழ்சேது மன்மரு வாருமவர்
உண்முக மார வுவந்துகொண் டேத்தி யுருகநிறை
எண்முக வாப்பொறை யேமுத லாய விருங்குணத்தான்
சண்முக ராசேச் சுரநாக நாத தயாகரனே. (1)

நீடும் நவம்பர் நவநா ளுதித்தவன் நித்தநவம்
பாடும் படிநவ மாம்பயி ரேறுநற் பண்புடையான்
நாடும் பொருள்கள் நவநவ மாத்தரு நல்லனிங்குக்
கூடும் நவநிதி யான்நாக நாத குலோத்துங்கனே. (2)

அத்தம் பெருகு முரையான் குறையுடை யார்க்கபய
அத்தம் திகழ்தகை யான்அத்த நாளி லவதரித்தான்
அத்தம் தனைவந் தடைவார் தமக்கீந் தவர்வறுமைக்கு
அத்தம் தனையளிப் பான்நாக நாத னவிசிறந்தே. (3)

வானோங்கி நின்ற மழைபுகழ் வார்க்கொரு வார்த்தையிங்கு
நானோங்கி நின்று நனியுரைப் பேனது நானிலத்தெங்
கோனோங்கி நின்ற கொடைநாக நாத குணநிதிபோல்
தானோங்கி நின்றதன் றூற்புல வோர்தம் தரமறிந்தே. (4)

மாலான வன்சீர் வளநாக நாத வரோதயனென்
பாலான மிக்க பழமைகொண் டோன்முப் பதுதொடர்ந்த
நாலான வெள்ளணி நாண்மங் கலமிது நான்வனைதல்
போலான தொன்றறி யேனவற் கின்று புரிவதுவே. (5)

வேறு

கிளையீட்டுயர் தகையாய்வரை கெழுதோட்டுணை யுடையாய்
விளையாட்டினு மெவரேயுனை வெல்வார்மிகு விறலாய்
கொளையூட்டிய வினிமைக்கிசை கொடையாய்மிடி யடியில்
தளையூட்டிய தழைசண்முக ராசேச்சுர தருவே. (6)

எனையிங்குன துழைவந்தமை யியலொன்றவி சைந்தாய்
நினையன்பொடு நெடிதின்புற நினையும்படி நின்றாய்
புனைவெண்டள வணிசண்முக ராசேச்சுர பூபா
வனைதண்டமி ழிவைகொண்டுள மகிழ்தந்திசை வாயே. (7)

புகழொன்றிய வானுத்திரு புகனுண்மதி யோடும்
இகழொன்றுமி லாமீக்கலே யெழிலும்மிக மேவி
மகிழ்சண்முக ராசேச்சுர வாமன்னவ நீடு
திகழ்தந்துல கோரேத்துறு திறமன்னுக நீயே. (8)

வேறு

பூமி மீதுபு கன்றெவ ருந்தொழு
சேது நாடுபு ரந்துசி றந்தமர்
போத மேயபு ரந்தர னென்றிசை— புனேவோனே
போக லாதப ழம்புகழ் விஞ்சிய
தேவை காவலர் செம்பியர் தங்குல
போச னுகவி ளங்கியி லங்கொளி— புரிவோனே

ராம நாதபு ரந்திக ழுங்குண
நாக நாதது ரந்தர வன்பொடு
ராம நாதனி ரண்டுப தம்பணி— நசையோனே
நாவ லோர்பர வுந்தமி ழின்சுவை
யூறி வாசமு டைந்துப ரந்தெழ
நார மோடிவ ளம்பல வுந்தரு— நதியோனே

நேமி மாலர விந்தநெ டுங்கழ
லோவி லாதுவ ணங்கியு வந்துனே
நேய மாரவி ழைந்துந லம்பெறு— நெறியானே
நீதி யோடுபொ ருந்துபெ ருந்திரு
மேவி வீறுற விம்பரி சைந்துறை
நீள நீநில வும்படி சந்ததம்— நினேவேனே

ஆம ருதுசு ரந்தமு தந்தரல்
மான நீதரு மொண்பொருள் கொண்டினி
தாக நீடுன திங்கியல் கின்றவெள்— ளணிநாளே
ஆவ லோடுபு கழ்ந்தும னங்கொடு
பாவ லோர்பல ரும்புனே யும்பல
வான பாவின லங்கல்பு யங்களி— லணிவாயே. (9)

இராமநாதபுரம் இராஜாஸ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்வான்

ஸ்ரீ ரா. இராமாநுஜ ஐயங்காரவர்கள் பாடியவை.

சீர்பூத்த தெய்வதமாஞ் சீராம மூர்த்திமுனம்
பார்பூத்த சேதுவெனும் படியாண்டு வாழ்கவென
நார்பூத்த வாசிபெறு நராதிபனுன் குலமுதல்வன்
ஏர்பூத்த சண்முகரா சேச்வரனெம் மிறையோனே. (1)

மலைவளர்கா தலியுமைக்கு மன்னுமிரா மேசர்க்கு
நிலைவளநல் லூரளித்த நேயமிகு காத்தன்முன்
அலைமிகுந்த பெருஞ்சேதுக் கரசேயுன் னணிமரபிற்
றலைமைபெற வவதரித்த தராதிபனென் றுரைப்பார்காண். (2)

தேவையரு ளீசர்க்குத் திருநடன மாளிகையுஞ்
சேவைதரு மாருட மண்டபமுஞ் செய்வித்த
கோவையணி காவலவன் கூத்தன்முன் புலவர்புகழ்
பாவைவனை வேந்தேயுன் பகர்மரபிற் பழையோன்காண். (3)

மேற்றிசைக்க ணுளவெருமை நாட்டரசர் வியன்றானை
சீற்றமுடன் செருமலையச் சென்றழித்து வாகைபுனை
ஏற்றமிகு திருமலைநல் லேந்தலுமுன் னெழிற்குலத்துத்
தோற்றமுடை யோனென்று சொல்லுவர்கா ணெம்வேந்தே. (4)

முகமதியர் பெருந்தானை முரணழித்து முன்னையினுந்
தகவுமிக வுயர்நாட்டைத் தஞ்சைமன்னர் வரைபரப்பிச்
சகமகிழ வாண்டரகு நாதனெனுந் தனிக்கோவும்
புகழ்நிறைந்த வரசேயுன் பொருவில்குலத் துதித்தவன்காண். (5)

இரணியகர்ப் பம்மெனச்சொ லெழின்மகத்தை யிவணியற்றித்
தரணிமிசைப் புகழ்நிறுவுந் தனிக்காத்த தேவன்முன்
அரணியத்தை யடையார்க்கே யிடமாக்கு மண்ணலுன்
முரண்விளங்கு மரபினிலே முன்னுதித்தோ னென்பார்காண். (6)

உன்மரபில் வருகிழவ வுரவோன்றன் மைத்துனனும்
மன்னன்ரகு நாதனையிம் மகிதலத்தோர் கொண்டாட
நன்னர்புதுக் கோட்டையெனு நாட்டரசாக் கினனென்ப
சொன்னயந்தேர் கோவேயித் தோமில்புகழ்க் கீடுண்டோ. (7)

புல்லைவளர் திருமாற்குப் பொன்னிறைகோ புரமுமமைத்
தெல்லையிலாப் பெருந்தளிக ளியற்றுவித்தே யிசைநிறுவுந்
தொல்லரசன் விஜயரகு நாதசெய துரந்தரன்முன்
நல்லிறைவ வுன்மரபி னனியுதித்தோ னென்பார்காண். (8)

திருத்தேவை நற்றளிப்பாற் செய்யசொக்கட் டான்வடிவில்
உருத்தேர்மண் டபஞ்செய்வித் தோங்குமுத்து ராமலிங்க
மருத்தேர்தன் டெரியலணி மன்னவனுன் மகிழ்மரபில்
தருத்தேர்வண் கொடைவேந்தே தனியுதித்தோ னென்பார்காண். (9)

காசிமுதற் றேவைவரை கண்ணியநற் றளிக்கெல்லாம்
ஏசலிலா வறப்புறமு மெழிற்பணியு மீந்துசெயும்
மாசில்கொடை மன்னர்வரு மரபின்மிகு மாண்பெல்லாந்
தேசுடைய புரவலனே செப்புவதும் அரிதாமே. (10)

வேறு

நலமார்திருத் தில்லைப்பதி நடமாடு மிறைக்கே
நாடும்மற வணியேந்தலை நல்கிப்புகழ் நட்டோர்
வலமாரரங் கத்தேதுயின் மாலுக்குநல் லாட்டூர்
வழங்கிப்புவி யிடைமேன்மையை வளரச்செயு மகிபர்
தலமாருயர் பொற்கொட்டையைத் தண்ணுவடு துறைசேர்
தனிமாமட னன்காரமுன் றன்மம்புரி வேந்தர்
குலமார்மணி யேயிவ்விசை குலவும்மர செவர்காண்
கொடைச்சண்முக ராசேச்வர குலசீல வெங்கோவே. (11)

வேறு

நன்மதுர கவியினிசை நலமோர்ந்து காக்கை
நற்குளமுஞ் சர்க்கரையென் நாவலவ னுக்கே
இன்பமிகு சிறுகம்பை யூருஞ்சவ் வாதென்
றேற்றமுளன் காணவுயர் சுவாத்தனெனு மூருந்
தன்மம்வள ருன்வழியின் சந்ததியி னோர்தாம்
தந்துமுனம் நல்லிசை தரித்தவர்க ளன்றே
தென்றமிழ் வளர்க்கவென வந்தபெரு மானே
சேதுபதி சண்முகரா சேசசெய துங்கா. (12)

வேறு

சிவிகை தாங்கிப்பு ரந்தனன் பாற்கரன்
செய்ய பொற்கடகம்பொரு ணல்கியிப்
புவியெ லாம்புக ழப்புரிந் தோம்பினன்
பூபன் ராஜரா ஜேச்வர தீபனுங்
குவிகை யுற்ற விரணத்தை நீக்கிப் பொற்
குவைய ளித்தனை சண்முக ராஜநீ
கவிகை வந்துய ரெந்தையைக் காத்துமுக்
காலும் போற்றிய கண்ணியம் நம்மதே. (13)

வேறு

கண்மு கந்தனிற் சிறியை யாயினுங் கருணை பொங்குமா காட்சி யுற்றனை
காமர் சில்செவி பெறுதி யென்னினுங் கவினு பற்பல கேள்வி மேவினை

எண்மு கந்தவாண் டதனி னீமிக விளையை யாயினு மறிவின் மூத்தனை
ஈங்கு மானிட வுருவ மெய்தினு மெழில்கொண் மாரவே ளென்ன நின்றனை

திண்மு கந்தசெங் கரமி ரண்டொடுந் திகழ்வை யாயினு மிகழ்வில் பல்கிளைத்
தேவ தாருவைப் போல மேவினை சிறிய நெஞ்சினிற் பெரிய கொள்கையை

சண்மு கம்பெறுந் தகைமை முன்னரே தங்கி நிற்றலைத் தந்தை யெண்ணியே
தாவி னல்லிசை மேவு னக்கிடுஞ் சண்மு கப்பெயர் தகவு மிக்கதே. (14)

வேறு

சீர்மிக்க தெய்வப்ர சாதங்க ணல்கிவே
தியராசி மொழிவ ரொருபால்
சேரநல் லன்னவத் திரம்பெற்ற மிடியாளர்
திசையுறப் புகழ்வ ரொருபால்
ஏர்மிக்க பந்துமுதல் விளையாட விற்பரிசை
ஏற்றவர்க ளிப்ப ரொருபால்
இனியயாழ் தண்ணுமையொ டிசைவாணர் கானவமு
தெவருமுண ஈவ ரொருபால்
பார்மிக்க மன்பதைக் குயிரேயெ னச்சொலிப்
பண்குடிக டொழுவ ரொருபால்
பரவுபிர தானிமுத லுத்யோகர் யாவரும்
பழிச்சியய னிற்ப ரொருபால்
கார்மிக்க சுற்றமுட னுவலர்கள் வாயார
நன்கேத்தி மகிழ்வ ரொருபால்
கயசுகுண நாகநா தேந்த்ரசண் முகராஜன்
நாண்மங்க லத்தி னிடையே. (15)

வேறு

திருநீடு தேவை நகராளுஞ் செயநாக நாத குணசீலா
மருநீடு மாலை வனைவோனே மறுவாறு காணு மிறையோனே
தருநீடு மீகை மிகுவீரந் தவிராத ஞான மிசையோடே
பெருநீதி மேவி நலவாயுள் பெரிதாக வாழ்க புவிமீதே. (16)

இராமநாதபுரம் ராஜாஸ்ஹைஸ்கூல் ஸம்ஸ்க்ருத பண்டிதர் சிரோமணி ஸ்ரீ V. S. தோதாத்ரி ஐயங்காரவர்கள் இயற்றிய

மங்களாஶாஸநஶ்லோகா:

ஸ்ரீமந்மஹாராஜவர்யாந் நந ஶ்ரீராஜேஶநாமேஶ்வரஸேதுநாத।
ஜந்மர்க்ஷஸம்யோகநவவைபவம் தநோது பூயாத் தீர்காயுஷ்யமேவ ॥

நாராயணீக்ருபயா ஶதத்ரிம்ஶாதிகதாயம்
வயஸ: பதமதிரோஹதி தவ கார்யவர்ஷாந்।
ஶாரதாபக்ஷஸ்வஸ்தாநிதாராம் பாவி பவ்யோ
விபவாதிகஸாதிதே நாஸ்வக்ருதார்திதேஹே ॥ (2)

ஸ்ரீராமேஶ்வரஸந்நிதாநவிபவஸந்தோஷகஸேவாஸம
ப்ருத்யாஶ்வமஹிஷ்யவர்தித ஜாஷாக்ரஜாவிஶேஷணதே।
ஸர்வேஷாம் ஹிதம் ப்ரஹர்ஷவிபவம் விஶ்ராணயத்வர்ஜிதே
ஹோராஜேஶ்வர நாம நாய ந்ருபதே தஜீயாத்விரம் தேயஶ: ॥ (3)

க்ருத்யவித்யாலயவ்ருத்திஹாரம்
ஸர்வம் யதாவதுஹதஸ்வாத்ய।
க்ருஶாஸ்ய ம்ருக்திமா ஹாதி ராஜந்
வயஸ்வ ஸர்வேரபி ஸம்பதௌவை: ॥ (4)

தக்ஷிணமேதாராந மராத்ராவிதஸம்வாயிநாயஸேதுவிதே।
வித்யாஹிமாநவித்வேதாதிகணம் தவாஹி நதாமா: ॥ (5)

வித்யாநிஷத்யாத்மகராஜராஜ
ஶ்ரீஜ்ஞாநியே தேவ்யதிதவ்யஹாவாந்।
ஸம்மத்ய ஸம்மத்ய மஹாமஹீஶா:
ஸர்வேऽபி மோதாம்பாயிமந்ஹித்தா: ॥ (6)

ஆசந்த்ராகர்ம் ராஜதாம் ராஜந்! தவ கீர்த்தி:
ஆபாந்த்யம் ஆமிசிஶவம் ஸாஸமேஜி:।
வித்யா ஹ்ருத்யா வ்ருத்திமேயாதநவத்யா
நித்யஶ்ரீஸ்யாந்நித்யஶாம் ஸ்யாத்தவ வம்ஶே ॥ (7)

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்தவிப்பத்திராசிரியர்
T. K. இராமாநுஜையங்கார் இயற்றியவை

தாழிசைகள்.

சங்க மருவுந் தமிழ்தழையத் தலைவனாகி யருள்புரியும்
மங்கை யொருபங் குடையபிரான் மலர்ச்சே வடிகள் வணங்குவாம்.
விண்முகில்போற் புலவர்குழாம் வேட்டவெலாம் பொழிந்தவரை
[விரும்பிப் போற்றும்
ஷண்முகரா ஜேச்சுரன்பூ தலமினிது புரக்கஅருள்தருக என்றே.

பொன்னாடுந் தொழுஞ்சேது பூபாலர் குலநிலமேற்பொலிவுற்றோங்க
எந்நாளும் புரந்தருளும் ராஜரா ஜேச்சுரிதாள் ஏத்தல் செய்வாம்.
நானிலமும் ஒருகுடைக்கீழ் நன்கமர்ந்து நலம்திளைப்ப நாளும் காக்கும்
மானபரன் ஷண்முகரா ஜேச்சுரவேள் நீடூழி வாழ்க வென்றே.

வழுத்திவரு வீடணனை மணிமகுடம் புனைவித்து வருணன் வந்து
தொழக்கருணை புரிபெருமான் இருபாதம் மலர்தூவித் தொழுதல் செய்வாம்.
தன்மநெறி தழைத்தொளிரத் தமிழ்செழித்துத் தலையெடுக்கச்
[சான்றோர் வாழத்
தென்முகவை நகராளும் ஷண்முகரா ஜேச்சுரன்சீர் சிறக்க வென்றே.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

புண்ணியமே செழித்தோங்கப் பாவம் தேயப்
புலவர்குழாம் உளமகிழப் புத்தேள் நாட்டுள்
எண்ணுமிரு நிதியுமிந்த ஞாலத் துள்ளே
இயையமழை யெஞ்ஞான்றும் இனிது பெய்யக்
கண்ணுதலும் திருமாலும் முதலாந் தேவர்
களிசிறக்க எழிற்சேது நாடு காக்கும்
வண்ண முத்து ராமலிங்க மன்னர்மன்னன்
மகிழ்ந்துதரு ஷண்முகராஜேசன் வாழி.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்
திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியவை.

உலகனைத்துந் தன்பால்வந் தொருங்குறினுந் தாங்கிவள னுதவும் வண்மை
யிலகுபுகழ்ச் செம்பிநாட் டெழின்முகமா முகவைநகர்க் கிறைவ னான
பலகலைகட் காகரமாஞ் சண்முகரா ஜேச்வரப்பேர்ப் பாராள் பூபன்
குலகிரிமே னின்றொளிரு மணிவிளக்காய் நீடாயுள் கூடி வாழி. (1)

மாமுகில்போல் வழங்குகொடை இராஜரா ஜேச்வரப்பேர் வாய்ந்த வேந்தல்
பூமிசைமுன் புரிதவத்தால் வள்ளலெழு வருமொருருப் பொருந்தக் கொண்டு
மாமகனு கிப்போந்த சண்முகரா ஜேச்வரப்பேர் மகிபன் வாழி.
நாமகள்பூ மகள்கருணை நலன்சிறந்து புவிபுரந்தெந் நாளு மாதோ. (2)

கல்லார்க்குங் கற்றூர்க்கும் கருதினர்க்குங் கருதார்க்குங் காத்திற் செல்வம்
இல்லார்க்கும் உள்ளார்க்கு மினிதருளுங் கற்பகமு மெழிலி யும்போல்
எல்லார்க்குந் தருகொடையான் சண்முகரா ஜேசுவர விறைவன் வாழி
சொல்லார்க்குங் கீர்த்திகதிர் மதியமுள வரையுலகிற் றுலங்கி மாதோ. (3)

மூவேந்தர் தமிழ்புரந்தா ரெனநூல்கள் சொலக்கேட்டோம் முகவை வேந்தர்
பாவேந்தர் தமைத்தமிழைச் சங்கத்தைப் புரந்திடுதல் பார்த்தோங் கண்ணால்
பூவேந்தர் புகழ்வேந்தன் சண்முகரா ஜேச்வரப்பேர் பூண்டோன் கூடற்
பாவேய்ந்த வொருநான்காந் தமிழ்ச்சங்கம் பாலிப்போன் பாரின் வாழி. (4)

வேறு

வாழி மதுரைத் தமிழ்ச்சங்கம் வளர்க்குஞ் சேது பதிமரபோர்
வாழி முகவை நகர் அந்நகர் வதியும் வித்வ சனர்முதலோர்
வாழி நாக நாதனெனு மாண்பார் பெயரும் புனே தருமால்
வாழி வாழி செங்கோன்மை வாழி வாழி வளன்சிறந்தே. (5)

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்
திரு. K. சிவஞானம்பிள்ளையவர்கள் இயற்றியவை.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கன்னல் கமுகோ வெனத்தோன்றும்
கழனிச் செம்பி வளநாடன்
கருணைக் கோமான் பாவலரைக்
காக்கும் ராஜ ராஜேச
மன்னன் மகனும் சண்முகரா
ஜேச மகிபன் வாஞெரும்
மண் ணு ளோரும் புகழ்ந்தேத்து
மகிமைச் சேது நாடாள்வோன்
தென்னன் தமிழு மாங்கிலமும்
தெளிந்து திகழ்செந் நாவுடையான்
தினஞ்செய் வோன்றன் குலதுங்கன்
சேர்ந்தோர்க் கெல்லாம் அளித்தருளும்
கன்ன னெனச்சொல் கொடையுடையான்
கலைகள் நிறைந்த மதியமெழக்
கண்ட கடல்போ லென்றென்றுங்
களித்து வாழி வாழியவே. (க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மல்லாருந் திண்புயத்துச் சண்முகரா ஜேசுவர
மகிப ரேறே
எல்லாரும் புகழ்பெருமை இராமலிங்க விலாசமதி
லெழில்பெற் றோங்கும்
வில்லாரு மணிகளிழைத் தொளிர்சிம்மா தனத்திருந்து
விபுதர் போற்றப்
பல்லாரும் புகழ் முகவைப் பதியிருந்து நீடாயுள்
பலுகி வாழி. (உ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காழியர் பெருமான் தமிழ்ச்சுவை தெரியக்
காட்டிய வையைமா நதியான்
ஆழியா னனையான் சேதுநா டாளும்
ஆட்சியே மாட்சியா வுடையான்
ஏழிசை யுடனே கூடிய சங்கத்
தியற்றமிழ் வளர்த்திடும் புனிதன்
வாழிய எங்கள் சண்முக ராஜேச்
வரனெனும் மன்னர் மன்னவனே. (௩)

பன்னரும் பெரியார் தமிழ்மறை யிணையும்
பண்புறு திருப்புக ழிணையும்
இன்னிசை பொருந்துந் தியாகராஜையர்
இயற்றிய கீர்த்தனை களையும்
நன்னய மாகக் கேட்டவர் களிக்க
நயம்பெறப் பாடிடும் புலவோன்
தன்னயங் கருதாச் சண்முக ராஜ
தராபதி நீடுவா ழியவே. (௪)

நேரிசைவெண்பா.

மலைவளருங் காதலிதாள் மாண்புறவே போற்றி
அலைகடல்சூழ் சேதுநா டாள்வோன்—கலைநிறைந்த
பூழியனு கேந்த்ரனெனும் பூபாலன் பூதலத்தில்
ஊழிபல வாழ்க வுவந்து (௫)

மதிப்புரை

சித்திரவாசகம் 1-வது 2-வது 3-வது புத்தகங்கள்:—இவை பிரசித்த அறிஞர்களாகிய திரு. ஜே. பி. மாணிக்கம் அவர்கள் M.A. L.T., திரு. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A, B.L. ஆகிய இருவரும் சேர்ந்து எழுதியவை; பெயர்க்கியையச் சிறுவர் கண்ணும் மனமும் கவரும் வனப்பின் அமைந்தவை; அரசாங்கத்தார் வெளியிட்ட ஆரம்பப்பள்ளிக்கூடப் போதனுமுறைத்திட்டத்தையும் குறிப்புக்களையும் தழுவி யெழுதப்பட்டவை; கற்கப்புகும் சிறுவர் தொடக்கத்தே துன்புறாது இன்புற்றுப்பயிலுமாறு இயன்றவை; சிறுவர் சிறுமியர் பழகிய பொருள்பற்றி, அவரவர் தகுதிக்கேற்றவாறு ஒவ்வொரு புத்தகத்திலும் பாடங்கள் தொடர்புடையவாய்த் தொகைவகைவிரியின் அமைய, அவற்றை இயற்கையோடு ஒட்டிய முறையிற் சித்திரங்களாலும் செவ்விய தமிழ்ச்சொற்களாலும் சொற்றொடர்களாலும் விளக்குவன; உலகப்பெரியார் விஷயமான சிறுகதைகளாலும் நீதிவாக்கியங்களாலும் விடுகதைகளாலும் பழமொழிகளாலும் இனிய செய்யுட்களாலும் குறிப்புரையாலும் நல்லறிவுபுகட்டுவன; ஏற்றபெற்றி இலக்கண அறிவையும் ஊட்டுவன; தமிழ்வாசகங்களுட் சிறந்தவற்றோடு எண்ணத்தக்கன. இவை அரசாங்கக்கல்வியிலாகா அதிகாரிகளாலும் பிற பள்ளிக்கூடநிர்வாகிகளாலும் ஆசிரியர்களாலும் இவற்றின் தகுதிக்கேற்ப நன்கு ஆதரிக்கப்பெறுமென்று நம்புகிறோம். இவற்றின்விலை: 1-வது புத்தகம் அணு 2½. 2-வது புத்தகம் அணு 3½. 3-வது புத்தகம் அணு 4½. கிடைக்குமிடம்: இந்தியக்கிறிஸ்டியன் லிட்டரேச்சர் ஸொஸைட்டி, சென்னை.

தேவி:—இது நாகர்கோவிலிலிருந்து வெளிவரும் ஒரு திங்கள் வெளியீடு. இதன் ஆசிரியர் இராமநாதபுரம் திரு. சூ. ம. மிக்கேல் முதலியாரவர்கள். ஆசிரியராலும் பிற புலவர்களாலும் சிறந்தமுறையில் உணர்ச்சியூட்டும்வண்ணம் எழுதப்பெறும் சிறுகதைகளும், நாடகமும், உலகியலும் அரசியலும்பற்றிய குறிப்புக்களும் இயற்றமிழ் இசைத்தமிழ்ப் பாடல்களும் கொண்டு வெளிவரும் இது, தமிழ்மக்கள் ஆதரவுபெறற்குரியது. வருடச்சந்தா அஞ்சற்செலவுடன் ரூபா 1—8—0. ஒருபிரதியின் விலை 2 அணு. ஆயுட்சந்தா ரூ 25. கிடைக்குமிடம்: மானேஜர், 'தேவி', நாகர்கோவில்.

கம்பராமாயணம் பாலகாண்டம் (ஆழ்வார்திருநகரிப்பிரதிகளின்படி):— பரிசோதித்தவர்: வித்வான் ராவ்ஸாஹிப். ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள். பிரசுரித்தவர்: ஆழ்வார்திருநகரித் திரு. பெரியன் வே. நா. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். விலை ரூபா 2. கிடைக்குமிடம்: திருஞானமுத்திரைக்கோவைப் பிரசுராலயம், ஆழ்வார்திருநகரி, திருநெல்வேலிஜில்லா.

தமிழிலக்கியங்களில் தலைசிறந்தவற்றுட் கம்பர் இயற்றிய இராமாவதாரமும் ஒன்று. தமிழ்நாட்டுள் யாவரும் இதன் நடையழகு சொல்லின்பம் பொருளாழம் அணிநயம் சுவைநயம் கற்பனை அரசியல் ஒழுக்கநெறி அறவுரை வீரவுரை முதலியவற்றில் ஈடுபட்டு இதனையே பெரிதும் பயில்வாராயினர். இதனைப் பழைய ஓலையேட்டுச்சுவடிகளோடு ஒப்புநோக்கி நன்கு ஆராய்ந்து பதித்து வெளியிட முயன்றுவருவாருள் திரு. பெரியன் ஸ்ரீநிவாஸையங்காரவர்களும் ஒருவராவர். இவர், பெருங்குடிப்பிறப்பும் அருந்தமிழ்ப் பயிற்சியும் பற்றும் உடையவர். இவர்க்குக்கிடைத்த ஓலைச்சுவடிகள் இருநூறுவருடங்களுக்குமுன் ஆழ்வார்திருநகரியில் இருந்த ஒரு புலவரும் பிறரும் எழுதியவை. ஆழ்வார்திருநகரியேடுகள் பதிப்போர்க்கு மிகவும் உபயோகப்படத்தக்கன. பழந்தமிழ்நூல் வெளியீடுகளுள், பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து பரிபாடல் புறநானூறு முதலிய நூற்பதிப்புக்களுக்கு ஆழ்வார்திருநகரியேட்டுப் பிரதிகள் மிகவும் உபயோகமாயிருந்தன என்பது ஐயரவர்கள் எழுதிய முகவுரையால் அறிந்தது. இந்நூற்பரிசோதகரான வித்வான் ராவ்ஸாஹிப். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள், பரந்த ஆராய்ச்சியும் விரிந்த புலமையும் வாய்ந்தவர்கள்; பல தமிழ்நூற் பதிப்புக்களைச் செவ்விதின் ஆராய்ந்து வெளியிட்டவர்கள். இவ்வாறு தகுந்த சுவடிகளின் உதவிகொண்டு சிறந்த புலவரால் இதனைப் பரிசோதித்து வெளியிடுவித்த திரு. பெரியன் ஸ்ரீநிவாஸையங்காரவர்களுடைய தமிழ்ப்பணி பாராட்டத்தகும். இப்பதிப்பினுட் காணப்படும் அதிகமான படலத்தலைப்புக்களும் பிறவும் இன்னும் பலபிரதிகள்கொண்டு நன்கு ஆராய்ந்து முடிவுசெய்யத் தக்கன. எனினும் இது, பயில்வார்க்கும், மேலும் இக்காண்டத்தை ஆராய்ந்து பதிக்கமுயல்வார்க்கும் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

பாண்டியர் வரலாறு:— எழுதியவர்: கும்பகோணம் வாணாதுறை உயர்தரகலாசாலையில் முன்பு தமிழாசிரியராயிருந்த திரு. T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள். விலை ரூபா. 1—4—0. கிடைக்குமிடம்:— திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், தமிழாசிரியர், ஆராய்ச்சித்துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். சென்னைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திலும் பெறலாம்.

தமிழ்நாட்டு மூவேந்தர்களுள், சங்கங்கண்டு தமிழ்புரந்த பெருஞ்சிறப்புடையவர் பாண்டியர்களாவர். அவர் சரிதக்குறிப்புக்கள் பழந்தமிழ்நூல்களிலும் சிலாசாசன மெய்க்கீர்த்திகளிலும் பிறநாட்டவர் எழுதிவைத்த சரித்திரங்களிலும் இடையிடையே காணப்படுகின்றன. அவற்றைத்தொகுத்துக் கடைச்சங்ககாலத்துக்குமுன்னிருந்து கி. பி. பதினேழாநூற்றாண்டின் தொடக்கம் வரை அரசுசெலுத்திய பாண்டிமன்னர் சரிதங்களைக் காலமுறைப்படி யாராய்ந்து சுருக்கிக்கூறும் இந்நூல், 'செந்தமி'ழில் அவ்வப்போது திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் தொடர்ந்தெழுதி வெளியிட்டுவந்த 'பாண்டியர்வரலாறு' என்னும் கட்டுரையின் தொகுப்பாயமைந்தது. இதனுள் வேள்விக்குடிச்செப்பேட்டிலும் சின்னமனூர்ச்செப்பேட்டிலும் கண்டனவும் பிறவுமாகிய மெய்க்கீர்த்திகளும், இடைக்காலப்பாண்டியர் கொடிவழிவிளக்கமும் இணைத்திருப்பது பயில்வார்க்குப் பெரிதும் பயன்படும். இது உயர்தரப் பரீக்ஷைகளுக்குப்பயிலும் மாணவர்க்குச் சரித்திரபாடமாகத்தக்கது.

திருக்கோவையார்மூலம்:—பதிப்பாசிரியர் யாழ்ப்பாணம் 'இந்துசாதன'த் துணையாசிரியர் திரு. க. கி. நடராஜபிள்ளையவர்கள். விலை: சதம் 50. வேண்டுவோர் பதிப்பாசிரியரிடம் பெறலாம்.

தமிழ்மொழியறிவு தழைதற்கும் சமயவுணர்ச்சி அமைதற்கும் திருக்கோவையாரை உரையுடன் பயில்வது இன்றியமையாததாகும். அம்முறையில் பயிலத்தொடங்குவார் முதலில் மூலபாடம் நன்கு மனனஞ்செய்துகோடற்குதவியாகவும், பயின்றாரும் அடிக்கடி அநுசந்திப்பதற்குதவியாகவும் கையடக்கமான உருவில் நல்ல காகிதத்தில் அழகாக இதன் அருமைபெருமையெல்லாம் விளங்கும்படி வித்வான் ஸ்ரீ. சி. கணேசையரவர்கள் எழுதிய முகவுரையுடன் திரு. நடராஜபிள்ளையவர்கள், தாம் எழுதிய பதிப்புரையும் திருக்கோவையார்—உவமைச்சிறப்பு என்ற சிறந்த ஆராய்ச்சியுரையும் அரும்பத அகராதியும் பாட்டுமுதற்குறிப்பகராதியும் உடையதாக இதனை வெளியிட்டுள்ளார்கள். பிள்ளையவர்களுடைய தமிழ்ப்பற்றும் ஆராய்ச்சியும் நன்கு மதிக்கத்தக்கன.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

முப்பத்தொன்பதாந்தொகுதி.

Volume-39.

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

விஷு—சித்திரபானு—ஹூ

1941—1942

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

மதுரை.

முப்பத்தொன்பதாந்தொகுதியுள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அகநானூறு:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L.	௫௪௭
அநுதாபக்குறிப்பு:—		௧௫௨, ௪௫௮
அநுதாபக்கூட்டம் (இராமநாதபுரம்):—		௨௭௧
ஆயுள்நீட்சி யாராய்ச்சி:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C.	௫௩௭
ஆராய்ச்சியின் ஆராய்ச்சி:—	ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A., B.L.	௨௦௧
ஆராய்ச்சியின் ஆராய்ச்சி பற்றிய குறிப்பு :—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G.B.V.C.	௨௪௯
இசைக்கிரமம்:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்	௫௭, ௫௦௯
இந்துக்கள்வரலாறு:—	ஸ்ரீ. த. இராமநாதபிள்ளையவர்கள், B.A.	௮௯—௧௨௧
மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிடவித்யாபூஷணம் டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் பிரிவாற்றது பாடிய இரங்கற்பாக்கள் :—	மஹாவித்துவான் பாஷாகவிசேகரர் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள்	௨௭௪
	ராவ்ஸாஹிப். வித்வான். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்	௨௭௭
	ஸ்ரீ. ரா. இராமாநுஜையங்காரவர்கள்	௨௭௯
	ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்காரவர்கள்	௨௮௦
	ஸ்ரீ. வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியாரவர்கள்	௨௮௧
	ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள்	௨௮௪
	ஸ்ரீ. T. N. அப்பனையங்காரவர்கள்	௨௮௫
	ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்	௨௮௬
	T. K. இராமாநுஜையங்கார்	௨௯௩
	ஸ்ரீ. வே. முத்துஸாமி ஐயரவர்கள் M.A, L.T.	௨௯௭
	ஸ்ரீ. சு. நவநீதகிருஷ்ணபாரதியாரவர்கள்	௩௯௭
இராமசேயம்:— (உத்தரகாதை)	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்	௧௧௧, ௧௩௧, ௨௬௦, ௩௧௯, ௪௦௧, ௪௫௩, ௪௮௯
உலகபுராணம்:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்	௧௯
ஊற்றுமலைஜமீந்தார் இருதயாலய மருதப்பத்தேவர்:-	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.	௧
ஐயமகற்றல்:—	ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A., B.L.	௯௭

'ஐயமகற்றல்'-ஆராய்ச்சி:-	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G.B.V.C.	௧௩௭
ஒரு சிறப்புப்பட்டம்:—	பத்திராசிரியர்	௪௧௧
கம்பராமாயண சாரம்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G.B.V.C.	௬௯, ௧௧௩, ௧௬௯, ௨௨௫, ௨௯௯, ௩௨௧, ௩௭௭, ௪௩௫
கம்பராமாயணசார சம்பந்தமான குறிப்பு:-	ஷை.	௧௨௯
கலைமாச்செல்வி:—	ஸ்ரீ. கவுணியன் வெண்ணெய்க்கண்ணனார்	௧௦௭
கிருஷ்ணன் மீனன்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G.B.V.C.	௫௦௧
குறிப்புக்குப் பிற்குறிப்பு:—	ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A, B.L.	௩௫௯
சங்கீத பாரிஜாதம்:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்	௫௨௫
சில நினைவுக் குறிப்புக்கள்:-	ஸ்ரீ. ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G.B.V.C.	௩௬௯
சிலம்புகழீஇ அயர்தல்:—	ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A., B.L.	௪௧
சேதுவேந்தர் பிறந்ததின வைபவம்:—	ஸ்ரீ. J. நாராயணசுந்தரமையங்காரவர்கள்	௫௫௩
சேதுவேந்தரவர்களது 34-வது வெள்ளணிநாள்விழா நான்மங்கலக்கவிகள்:-	மஹாவித்துவான் பாஷாகவிசேகரர் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள்	௫௫௭
	ராவ்ஸாஹிப். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்	௫௬௧
	ஸ்ரீ. J. நாராயணசுந்தரமையங்காரவர்கள்	௫௬௨
	ஸ்ரீ. ரா. இராமாநுஜையங்காரவர்கள்	௫௬௪
	ஸ்ரீ. V. S. தோதாத்ரி ஐயங்காரவர்கள்	௫௬௭
	T. K. இராமாநுஜையங்கார்	௫௬௮
	ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்	௫௬௯
	ஸ்ரீ. K. சிவஞானம்பிள்ளையவர்கள்	௫௭௦
தத்துவப்பிரகாசர்காலம்:—	ஸ்ரீ. மு. அருணாசலம்பிள்ளையவர்கள் M.A.	௩௬௧
தமிழ்நாட்டெல்லை:—	சுவாமி ஞானப்பிரகாசரவர்கள்	௧௪௯
தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—		௪௬௪
திருக்கோட்டியூர்ச் சௌமியநாராயணப் பெருமாள் திருநாள் வாகனக்கவி:—	ஸ்ரீ. மு. அருணாசலம்பிள்ளையவர்கள் M.A.	௧௦௫
திருப்புல்லாணிச் சேகநாதர்பேரில் ஊசல்:—	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.	௩௫௪
திருப்புல்லாணிச் சேகநாதர்பேரில் வண்ணம்:—	ஷை	௩௬௯

திருப்புல்லாணிச் சேகநாதர்பேரில் விண்ணப்பம்:— T. K. இராமானுஜையங்கார் உதவிப்பத்திராசிரியர். ௨௫0
திருப்புல்லாணிச் சேகநாயகர்மீது சிந்து:— ஷை ௨௪௧
திருப்புல்லாணிப் பதுமாசனித்தாயார்பேரில் ஊசல்:— ஷை ௩௫௭
திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத் திருக்கோயிலைப்பற்றிய செய்திகள்:- ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் ௩௩
பட்டினப்பாலைத் தலைவன் யார்?:— ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A., B.L. ௧௫௩
பிழைதிருத்தம்:— ௧௬, ௨00, ௩௬0
பிற்குறிப்புக்குப் பிற்குறிப்பு:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. ௩௯௫
பெரியார்பிரிவு:—பத்திராசிரியர் ௨௬௫
பொய்யும் மெய்யும்:—சுவாமி ஞானப்பிரகாசரவர்கள் ௪௮௧
மதிப்புரை:—௧௧0, ௧௬௭, ௨௨௩, ௩௧௮, ௩௬௭, ௪௧௩, ௪௫௯, ௪௮௮, ௫௨௨, ௫௭௨
மதுரை இயற்றமிழ்மகாநாட்டுத் தலைவர்பேருரை:— ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள் ௪௬௫
மதுரை இயற்றமிழ்மகாநாட்டைத்தொடங்கிவைத்த மாட்சிமைதங்கிய ஸேதுபதிமகாராஜாவர்கள் சொற்பொழிவு:— ௪௧௭
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ௨௪௬
வங்கியம்:— ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள் ௩௭௩
விஞ்ஞானமுன்னேற்றம்:— ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. ௫௪௧
விஞ்ஞானவளர்ச்சி:— ஷை ௪௪௩

அநுபந்தம்.

விஷயம்.

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:-(பகுதி 11) பக். 1-34
மதுரைத்தமிழ்ச்சங்க வரவு செலவு கணக்கு:—(பகுதி-௫.) பக். 1–8

நூல்.

[முற்றுப்பெறாதது.]

திருநகைமான்மியக் குறிப்புரை:— T. K. இராமானுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர் (பகுதி-10.) பக். 679-682

பொருளுரை வழங்கியோர்பெயரும் பொருளுரைகளின்பெயரும் பக்கமும்

ஸ்ரீ. ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்காரவர்கள், தென்திருப்பேரை.

இரங்கற்பா உஅ0

ஸ்ரீ. T. N. அப்பனையங்காரவர்கள், தலைமைத்தமிழாசிரியர், இராமேசுவர தேவஸ்தானபாடசாலை, மதுரை.

இரங்கற்பா ... ... உஅரு

ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. மயிலாப்பூர், சென்னை.

விஞ்ஞான முன்னேற்றம் ... ... ருசக

விஞ்ஞான வளர்ச்சி ... ... சசங

ஸ்ரீ. மு. அருணாசலம்பிள்ளையவர்கள், M.A. சாம்பசிவம்தெரு, தியாகராயநகர் சென்னை.

தத்துவப்பிரகாசர்காலம் ... ... ஙசுக

திருக்கோட்டியூர்ச் சௌமியநாராயணப்பெருமாள் திருநாள்வாகனக்கவி ... ... க0ரு

ஸ்ரீ. மஹாவித்வான் பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்காரவர்கள், இராமநாதபுரம்.

இரங்கற்பா ... ... உஎச

நாண்மங்கலக்கவிகள் ... ... ருருஎ

ஸ்ரீ. ராவ்ஸாஹிப் வித்வான் மு. இராகவையங்காரவர்கள், இராமநாதபுரம்.

இரங்கற்பா ... ... உஎஎ

நாண்மங்கலக்கவிகள் ... ... ருசுக

ஸ்ரீ. த. இராமநாதபிள்ளையவர்கள், B A. ஆசிரியர், ஸ்கந்தர்வரோதய காலேஜ், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

இந்துக்கள்வரலாறு ... ... அகூ, கஉக

ஸ்ரீ. வயி. நாக. ராம. அ. இராமநாதன்செட்டியாரவர்கள், மதுரை.

இரங்கற்பா ... ... உஅக

ஸ்ரீ. ரா. இராமாநுஜையங்காரவர்கள், தமிழாசிரியர், ராஜாஸ் ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

இரங்கற்பா ... ... உஎகூ

நாண்மங்கலக்கவிகள் ... ... ருசுச

T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர், செந்தமிழ்.
இரங்கற்பா ௨௯௩
இராமசெயம் ௧௧௧, ௧௩௧, ௨௬௦, ௩௧௯, ௪௦௧, ௪௫௩, ௪௮௯
குருகைமான்மியக் குறிப்புரை (பகுதி ῼ) பக் 679—682
திருப்புல்லாணிச் செகநாதர்பேரில் ஊசல் ௩௫௪
ஷை ஷை சிந்து ௨௪௧
ஷை ஷை வண்ணம் ௩௪௯
ஷை ஷை விண்ணப்பம் ௨௫௦
திருப்புல்லாணிப் பதுமாசனித்தாயார்பேரில் ஊசல் ௩௫௭
நாண்மங்கலக்கவிகள் ௫௬௮

ஸ்ரீ. K. சிவஞானம்பிள்ளையவர்கள், ஆசிரியர், மதுரைத்தமிழ்ச் சங்கக்கலாசாலை.
நாண்மங்கலக்கவிகள் ௫௭௦

ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், ஆசிரியர், திருவையாறு.
திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத் திருக்கோயிலைப்பற்றிய செய்திகள் ... ௩௩

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C. வெள்ளகால்.
ஆயுள்நீட்சி யாராய்ச்சி ௫௩௭
ஆராய்ச்சியின் ஆராய்ச்சிபற்றிய குறிப்பு ௨௪௯
ஊற்றுமலை ஜமீந்தார் இருதயாலயமருதப்பத் தேவர் ௧
'ஐயமகற்றல்'—ஆராய்ச்சி ௧௩௭
கம்பராமாயணசாரம், ௬௯, ௧௧௩, ௧௬௯, ௨௨௫, ௨௯௯, ௩௨௧, ௩௭௭, ௪௩௫
கம்பராமாயணசாரசம்பந்தமான குறிப்பு: ௧௨௯
கிருஷ்ணன் மீனன் ௫௦௧
சிலநினைவுக் குறிப்புக்கள் ௩௬௯
பிற்குறிப்புக்குப் பிற்குறிப்பு ... ௩௯௫

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர், யாழ்ப்பாணம்.
தமிழ்நாட்டெல்லை ௧௪௯
பொய்யும் மெய்யும் ௪௮௧

ஸ்ரீ. சிரோமணி, V. S. தோதாத்ரி ஐயங்காரவர்கள், ஸம்ஸ்க்ருத பண்டிதர், ராஜாஸ் ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
மங்களாசாசனமாலிகா ௫௬௭

பொருளுரை வழங்கியோர்பெயர் முதலியன

ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள், ஆசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

இரங்கற்பா ௨௮௯
நாண்மங்கலக்கவிகள் ௫௬௯

ஸ்ரீ. சு. நவநீதகிருஷ்ணபாரதியாரவர்கள், மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.

இரங்கற்பா ௩௯௭
கலைமாச்செல்வி ௧௦௭

ஸ்ரீ. ஜே. நாராயணசுந்தரமையங்காரவர்கள், தமிழாசிரியர், ராஜாஸ் ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

இரங்கற்பா ௨௮௪
சேதுவேந்தர் பிறந்ததினவைபவம் ... ௫௫௩
நாண்மங்கலக்கவிகள் ௫௬௨

ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A., B.L. பசுமலை.

ஆராய்ச்சியின் ஆராய்ச்சி ௨௦௧
ஐயமகற்றல் ௯௭
குறிப்புக்குப் பிற்குறிப்பு ௩௫௯
சிலம்புகழீஇ அயர்தல் ௪௧
பட்டினப்பாலைத் தலைவன்யார்? ... ௧௫௩

ஸ்ரீ. வே. மூத்துஸாமி ஐயரவர்கள், M.A., L.T.

இரங்கற்பா ௨௯௭

ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்

இசைக்கிரமம் ௫௭, ௫௦௯
உலகபுராணம் ௧௯
சங்கீத பாரிஜாதம் ௫௨௫
மதுரை இயற்றமிழ்மஹாநாட்டுத் தலைவர்பேருரை ௪௯௫
வங்கியம் ௩௭௩

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L. சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத்தலைவர்

அகநானூறு ௫௪௭

மகாமாட்சிமைதங்கிய சேதுவேந்தர்பெருமானான ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல மூத்துவிஜயரகுநாத ராஜா ஸ்ரீ. M. ஷண்முகராஜேசுவர சேதுபதிமஹாராஜரவர்கள்.

மதுரை இயற்றமிழ்மஹாநாட்டைத் தொடங்கிவைத்துச் செய்த சொற்பொழிவு ௪௧௭